RE/MAX BLUE FORCE REALTRON
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 21 யூலை 2023 இதழ்:- 10

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது - ரணில்
## 13 மைனஸ் வேண்டாம் - தமிழ்க்கட்சிகள்




13ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தின் அனுமதியின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது. அத்துடன் சில விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் (3ம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்க தமிழ்மக்களை ஏமாற்றுகின்றார்!
## தென்னிலங்கை சிங்களக் கட்சிகளும் கூறுகின்றன!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகிறார். அவர் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு தரமாட்டார். அவரிடம் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்திய சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. தலைவரான அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் கருத்து வெளியிடும் போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். (7ம் பக்கம் பார்க்க)

## இந்துத்துவத்தின் அகண்ட பாரத பொம்மலாட்டம்!
## நூல் பிடிக்கும் புலம்பெயர் சாகச பொம்மைகள்!



இந்திய அரசு ஈழத்தமிழர்களின் தேசியக் கோரிக்கைகள் தொடர்பாக என்ன வகையில் எல்லாம் நடந்து வருகிறது என்பது தொடர்பாக புதிய வியாக்கியானங்கள் தமிழ் மக்களுக்கு அவசியப்படும் நிலை இன்றில்லை. இந்திய அரசு மட்டுமல்ல உலகில் இருக்கும் வலிமை வாய்ந்த அரசுகள் அனைத்தும் தமது தேசத்தின் நலன் சார்ந்து தான் (19ம்பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com



20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Markham Rd & Denison


**Markham** $599,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Walking Distance To Banks, Costco

### Tecumesh Rd E & Hall Ave

**Windsor** $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

### Markham & Eglinton

**Scarborough** $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St

**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Ryerson/Victoria

**Niagara Falls** $649,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Fantastic Investment Potential

### Lawrence & Morningside

**Scarborough** $659,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### Liverpool & Bayly


**Pickering** $724,500
Bedrooms: 2 Washrooms: 2
Beautifully Maintained, Upgrades

### Durham 57/Mcgill Dr

**Kawartha Lakes** $834,000
Bedrooms: 3 Washrooms: 1
Newly, renovated waterfront cottage

### Warden / St.Clair

**Toronto** $849,900
Bedrooms: 4 Washrooms: 3
Feel the Freshness of New Built home

### Finch & Mccowan

**Scarborough** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Close To All Amenities

### Meadowvale & 401

**Scarborough** $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Morningside & Finch


**Scarborough** $999,900
Bedrooms: 4+1 Washrooms: 3
Fully Renovated Detached Home

### Meadowvale / 401

**Scarborough** $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Ellesmere & Neilson

**Scarborough** $739,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Good Potential for first time buyers

### Warden / Finch
FOR LEASE

**Scarborough** $2,700
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Fully Painted

### Westney & Rossland

**Ajax** $998,000
Bedrooms: 3 Washrooms: 4
finished basement with a full bath

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது - ரணில்
# 13 மைனஸ் வேண்டாம் - தமிழ்க்கட்சிகள்



13ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தின் அனுமதியின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது. அத்துடன், சில விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய கட்சிகளிடம் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பயணத்துக்கு முன்னதாக தமிழ்த் தேசிய கட்சிகளை பேச்சுக்கு அழைத்தார்.

18 யூலை 2023 செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டட வளாகத்தில் இந்தப் பேச்சு நடந்தது. பேச்சின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் கொண்டு வந்த சில தயார்படுத்தல்களான மனித உரிமைகள் விவகாரம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பான விடயங்களை

விவரித்தார்.

சம்பந்தனின் எதிர்ப்பை தொடர்ந்து அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்துக்கு கலந்துரையாடல் மாறியது. இந்தப் பேச்சின் போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. அதற்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் ஆதரவும் தேவை என்று ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், பொலிஸ் அதிகாரம் இல்லாத 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். அத்துடன், சில விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்கும் இந்த விடயங்கள் தொடர்பில் சட்டரீதியாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தரப்பு தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கவே நான் விரும்புகிறேன். அவர்களால் அரசியல் ஆதாயங்களைப் பெறுவது எனது நோக்கமல்ல. வடக்கு, கிழக்கு மக்களுக்கு நான் ஒருபோதும் அநீதி இழைக்கப் போவதில்லை. அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமாயின் கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பாராளுமன்றத்தின் முழுமையான ஆதரவை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இதன் போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதனிடையே, 13ஆம் திருத்தம் குறித்த ஜனாதிபதியின் இந்த முடிவை தாம் ஏற்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

13ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களே போதாத நிலையில் 13 மைனஸ் அதிகாரங்களை ஒருபோதும் நாம் ஏற்கப்போவதில்லை என்று இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், சி. வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சி. சிறீதரன், த.சித்தார்த்தன், சாணக்கியன் இராசமாணிக்கம், தவராசா கலையரசன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோருடன் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி தரப்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, விஜயதாஸ ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், ச. வியாழேந்திரன், சி. சந்திரகாந்தன் மற்றும் கே. திலீபன் எம். பி. ஆகியோர் பங்கேற்றனர்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# எங்களைத் தொடர்ந்து ஏமாற்றாதீர்கள் -சம்பந்தர்
# பேச விரும்பாவிடின் எழுந்து செல்லுங்கள் -ரணில்

எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள் என்று இரா. சம்பந்தன் எம். பி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடும் கோபத்தை வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு குறித்து பேசவில்லை. மாறாக தாம் தயார்ப்படுத்திக் கொண்டு வந்த மனித உரிமைகள் சார் விடயம், காணாமல் போனோர் பணிமனை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாகவே விளக்கமளித்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசப்படாத நிலையில், சினமுற்ற இரா. சம்பந்தன் எம். பி., எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள். அதிகாரப் பகிர்வு குறித்து முதலில் எங்களுடன் பேசுங்கள் என்று தெரிவித்தார்.

இதன் பின்னரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13இன் நடைமுறை குறித்துப் பேசினார்.

பேச விரும்பினால் மட்டும் என்னுடன் பேசுங்கள். இல்லையேல் நீங்கள் எழுந்து செல்லலாம் என்று இரா. சம்பந்தன் எம். பியிடம் சந்திப்பில் தனது கோபத்தை வெளிப்படுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள். அதிகாரப் பகிர்வு குறித்து முதலில் எங்களுடன் பேசுங்கள் என்று சம்பந்தன் தனது சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சம்பந்தன் கடும் தொனியில் கூறிய இந்த வார்த்தைகளால் சினமுற்ற ஜனாதிபதி பேச விரும்பினால் மட்டும் என்னுடன் பேசுங்கள். இல்லையேல் நீங்கள் எழுந்து செல்லலாம் என்று கூறினார்.

தொடர்ந்து, என்னால் தரக்கூடியவற்றையே தர முடியும். 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதானால் பாராளுமன்றில் 3இல் 2 பெரும்பான்மை அவசியம். அதனை செய்ய எம்மால் முடியாது என்றும் அவர் கோபமாகவே பதிலளித்தார்.

இதேவேளை நான் ரணில் விக்கிரமசிங்க ரணில் ராஜபக்ச அல்ல என ஜனாதிபதிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் இடம் பெற்ற கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரனால் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு பதிலளித்தார்,

மஹிந்த ராஜபக்ஷ 13 + தீர்வினை வழங்க தயாராக இருப்பதாக முன்னர் அறிவித்திருந்தார் அதே போல் நாமல் ராஜபக்ச பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பிலும் பேசியிருந்தார்

குறிப்பாக நீங்களும் கடந்த 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றினை பெற்று தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு (20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13வது திருத்தம்! முற்றாக நிராகரித்தது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு!



பொலிஸ்அதிகாரங்கள் இல்லாமல் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முற்றாக நிராகரித்துள்ளது. அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பகிர்விற்கான முன்மொழிவை மற்றுமொரு வெற்று வாக்குறுதி என தமிழ்தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் எங்கள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த தயாரில்லை என்றால் அது 13க்கு அப்பால் செல்வதற்கு இலங்கை அரசிற்கு அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பது தான் அர்த்தம் எனதமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்ஏசுமந்திரன் இந்து நாளிதழிற்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் யோசனைகளை நாங்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்து நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளதாவது. 21ம் திகதி இந்தியாவிற்கான ரணில்விக்கிரமசிங்கவின் விஜயத்திற்கு முன்னதாக அவர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துள்ளமையும், 13வது திருத்தம் குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாடும் முக்கியத்துவம் பெருகின்றது.

1987ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையை தொடர்ந்து சட்டமாக மாறிய 13வது திருத்தசட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றது.

சுயநிர்ணய உரிமைக்கான இலங்கை தமிழர்களின் கோரிக்கையை தொடர்ந்து சில அதிகாரப்பகிர்விற்கான ஒரேயொரு சட்ட உத்தரவாதமாக அது காணப்படுகின்றது. எனினும் 13வது திருத்தம் சிங்களமக்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள் உட்பட 9 மாகாணங்களுக்கும் அதிகாரங்களை பகிர்வதற்கு முயல்கின்றது.

கொழும்பின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் பொலிஸ் காணி அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள மறுத்துள்ளனர். எனினும் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 14 வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கில் செவ்வாய் கிழமை தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையை கண்டறியும் பொறிமுறைகள் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பான தனது அரசாங்கத்தின் திட்டங்களை கோடிட்டுக்காட்டும் ஜனாதிபதி பகிர்ந்து கொண்டுள்ளார். அபிவிருத்தி திட்டங்களில் கடந்த காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட பலாலி விமானநிலையம் காங்கேசன்துறைதுறைமுகம் மற்றும் அதிகளவு பேசப்பட்ட இன்னமும் நடைமுறைக்குவராத தென்னிந்தியாவிற்கும் வடபகுதிக்கும் இடையிலான படகுசேவைகள் போன்றவையும் காணப்பட்டன.

16பக்க ஆவணத்தின் சிறிய பகுதியொன்று பொலிஸ் அதிகாரங்கள் இன்றி 13வது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கின்றது.

மாகாணசபைகளிற்கு வழங்கப்பட்ட சில விடயங்கள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ளன அந்த விடயங்கள் மாகாணசபைகளின் கீழ் வருவதற்கு சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஜனாதிபதி ஊடக பிரிவு வெளியிட்ட ஆவணம் தெரிவித்துள்ளது

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



## திரு தவசீலன் சுப்பையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்து தாகத்தில் அமரத்துவமடைந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 யூலை 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தவசீலன் சுப்பையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!


எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வழமையான பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புதிய முகவரி

104 Rivalda Rd
Northyork - On - M9M 2M8
(Weston/Sheppard)

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

# 5 தமிழ்க்கட்சித் தலைவர்களுடன் அமெரிக்கத் தூதுவர் ஆலோசனை!



வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவருடன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், 17 யூலை 2023 திங்கட்கிழமை முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி. விக்னேஸ்வரன், சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக, அவர் தனது டுவிட்டர் பதிவில், தமிழ்த் தலைவர்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுவதில் பெருமையடைகிறேன். உண்மை, நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதிக்காக இலங்கை பாடுபடுவதால், அதிகாரப்பகிர்வு, காணி திரும்பப் பெறுதல் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான பதில்களைக் கண்டறிதல், பாரிய புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் உள்ளிட்டவற்றின் முக்கியத்துவம் பற்றி விவாதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

# அரசிற்குள் ஆழமாக வேரூன்றியுள்ள சிங்கள பௌத்த வாதம் பேர்ள் அமைப்பு குற்றச்சாட்டு!

குருந்தூர்மலை பொங்கலை குழப்ப முயன்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த தவறியுள்ளமை அரசிற்குள் சிங்கள பௌத்த தேசியவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளதை புலப்படுத்துகின்றது என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான அமைப்பு பேர்ள் தெரிவித்துள்ளது.

குருந்தூர் மலை ஆலயத்தில் பொங்கல் பொங்குவதை பௌத்த மதகுருமார் தலைமையில் சிங்கள கும்பலொன்று தடுக்க முயன்றமை அச்சுறுத்தியமை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை பாதுகாக்க தயாரில்லை என்பதற்கான மற்றுமொரு எடுத்துக் காட்டு என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொங்கலை தடுத்து நிறுத்துவதற்காக 11ம் திகதி பௌத்த மதகுரு ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்றம் அதனை நிராகரித்துள்ள போதிலும் அந்த நிகழ்வை தடுத்து நிறுத்துவதற்காக பௌத்த மதகுருமார் உட்பட 100 பேருக்கு மேல் குருந்தூர் மலையில் ஒன்று திரண்டார்கள் எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த நிகழ்வை குழப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியை பொலிஸார் தடுத்து நிறுத்த தவறியமை அரசிற்குள் சிங்கள பௌத்த தேசியவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளதை புலப்படுத்துகின்றது எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஸ்ரீலங்காவில் 5 இஸ்லாமிய அமைப்புக்களின் தடை நீக்கம்!

ஏப்ரல் 21 தாக்குதலையடுத்து, தடை செய்யப்பட்ட ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் மீதான தடை, கடுமையான நிபந்தனைகளுடன் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விசாரணைகளை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு 11 இஸ்லாமிய அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதன்பின், ஓராண்டுக்கும் மேலாக, புலனாய்வு அமைப்புகளின் நிபுணர்கள் கொண்ட குழு, இந்த அமைப்புகளின் செயற்பாடுகளை அவதானித்து வந்தது.

நிதியுதவி கிடைக்கபெறும் மூலங்கள் மற்றும் அமைப்புகளின் செயல்பாடுகளை அவதானித்த பின்னர், தடைக்கு உள்ளாகியிருந்த 11 அமைப்புகளில் ஐந்து அமைப்புகளின் மீதான தடையை தற்காலிகமாக நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜம்இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹம்மதியா, ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாத், லங்கா தவ்ஹீத் ஜமாத் மற்றும் ஐக்கிய தவ்ஹீத் ஜமாத் ஆகிய அமைப்புகளுக்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்காலிகமாக இந்தத் தடை நீக்கப்படுவதாகவும், குறித்த அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் நிதி திரட்டல்கள் குறித்து தீவிரமாக கண்காணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால், இந்த அமைப்புகள் மீது மீண்டும் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# நீதி வழங்காத இலங்கை! மனிதஉரிமைகள் கண்காணிப்பகம்

2009இல் முடிவடைந்த நாட்டின் கொடூரமான உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் மே 18 தொடர்பில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 'தாக்குதலற்ற வலயங்கள்' என்ற இடங்களை அறிவித்து பொதுமக்கள் அங்கு சென்ற பின்னர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர், அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்ட ஏராளமான போராளிகள் மற்றும் சிவிலியன் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் சட்டத்திற்கு புறம்பாக கொல்லப்பட்டனர் அல்லது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் நினைவூட்டியுள்ளது.

இந்தநிலையில் போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும், நீதி வழங்கப்படவில்லை மாறாக இலங்கை அரசு தனது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்து வருகிறது. காணாமல் போனவர்களின் தாய்மார்கள், தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதியை அறிய தொடர்ந்து முயன்று வரும் ஒரு குழுவினர், பாதுகாப்பு படையினரின் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். காணாமற் போனோரைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் எந்த முன்னேற்றமும் அடையவில்லை. மோதலின் போது, சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சிறுவர் படையினரைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட எண்ணற்ற உரிமை மீறல்களை இரு தரப்பினரும் மேற்கொண்டனர்.

26ஆண்டு கால உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் நடந்த பாரதூரமான உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தீவிரமாக விசாரித்து உரிய முறையில் தண்டிக்கத் தவறிவிட்டதாக ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள், மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் பிற மனித உரிமை அமைப்புகள் நீண்டகாலமாக இலங்கை நிர்வாகங்களை விமர்சித்து வருகின்றன.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சில அரசாங்க அதிகாரிகள் அரசியல் ரீதியாக பலம் வாய்ந்தவர்களாக அல்லது இலங்கை இராணுவத்தில் உயர் பதவிகளை வகிக்கின்றனர். தமிழர்களுக்குச் சொந்தமான அல்லது இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை அதிகாரிகள் கைப்பற்றுவது அல்லது வைத்திருப்பது தொடர்கிறது. போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை தொடர அரசாங்கம் விரும்பாததால், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேறு இடங்களில் நீதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இலங்கை மற்றும் வெளிநாட்டு நீதித்துறை அதிகாரிகளின் 'கலப்பின' செயல்முறையை திட்டமிடும் முந்தைய ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகிய பின்னர், எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை சேகரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஒரு பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவியது.

இந்தநிலையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு முன்மொழிந்தார். ஆனால் முந்தைய அனைத்து உள்நாட்டு ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நீதிக்கான முயற்சிகளை ஊக்குவிப்பதை விட ஓரங்கட்டுவதற்கான ஒரு வழியாகும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே இலங்கை அரசாங்கம் முட்டுக்கட்டை போடுவதை நிறுத்திவிட்டு, பலர் பாதிக்கப்படும் பாரதூரமான மீறல்களை விசாரித்து வழக்குத் தொடர வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டும். அது வரை, இலங்கையிலும் வெளிநாடுகளில் நீதியை தீவிரமாக தொடர ஐக்கிய நாடுகளின் பொறுப்புக்கூறல் திட்டத்துடன் ஏனைய நாடுகள் இணைந்து செயற்படவேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்ஷி கங்குலி கோரியுள்ளார்.

# தமிழ்மொழியை உலகம் அறியச் செய்ய G.u போப்கிற்கு தமிழர்களால் கனடிய மண்ணில் நினைவுச் சின்னம்

கனடாவில் பிறந்து இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்து தமிழ்நாட்டில் மிஷனரிப் பணியாற்றிய ஜி.யு. போப் இற்கு அவரின் பிறந்த ஊரில் நினைவுச்சின்னம். கனடியத் தமிழர் பேரவையின் முன்னெடுக்கப்பட்டது

ஜி.யு.போப் திருவாசகம், திருக்குறள், திருவருட்பயன், நாலடியார் ஆகிய நான்கு நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் மொழியினதும் சைவ சமய தத்துவத்தினதும் பெருமையை உலகறிய வைத்தவர். கடந்த ஜீலை 15 ஆம் திகதி ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வில் நானும் ஒரு பங்காளியா இருந்தமை பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது!

ஆம் கனடிய தமிழர் பேரவையினரின் ஏற்ப்பாட்டில் தமிழ் மொழிக்கு பெரும் தொண்டாற்றி தமிழறிஞராய் வாழ்ந்து மறைந்த ஆங்கிலேயரான ஜி யு பொப் அவர்களுக்கு அவர் பிறந்த இடமான பிறின்ஸ் எட்வேட் தீவுகளின் பெடேக் நகரில் அன்னாரின் உருவ சிலை ஒன்றை நிறுவியதுடன் மற்றுமொரு அவரது உருவச்சிலையை அங்கிருக்கும் வரலாற்று அருங்காட்சியகத்தில் காட்சிக்கும் வைக்கப்பட்டது!

சமூக வலைதளத்தில் அறிமுகமான Parameswaran Rasanthan அவர்களின் திறமையை கண்டு அவருக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்கி CTC இனரின் அனுசரணையில் ராசாந்தன் அவரின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட G U Pope அவர்களின் உருவ சிலையே பிறின்ஸ் எட்வேட் தீவின் பெடேக் நகரில் அமையப் பெற்ற அருங்காட்சியகத்தில் நிரந்தரமாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு தமிழக முதல்வர் வாழ்த்துத் தெரிவிதார்

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 13–7–2023

திருக்குறளை உலகறியச் செய்த பெருமைக்கு உரியவர் திரு. ஜி.யு. போப் அவர்கள். அவருக்கு அவரது பிறந்தகமான கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் உள்ள பெடெக் நகரத்தில் திருஉருவச்சிலை அமைக்கப்படுவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. ஜி. யு. போப் அவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி அளப்பரியது. அவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஆவார். அவரது மொழிபெயர்ப்பு உன்னதமான மொழிபெயர்ப்பாக இன்றும் போற்றப்படுகின்றது. அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பன்னிரெண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது அரிய இப்பணி, தமிழ் மொழியை தமிழர் அல்லாதவர்களிடமும் கொண்டு சேர்த்தது.


போப் ஐயர் என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர், ஏறத்தாழ 40 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றினார். அதன் பின்பும், இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, திரு. ஜி.யு. போப் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் அவரது முழு உருவச்சிலையை நிறுவி அவரது புகழுக்கு பெருமை சேர்த்தது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வரும் எங்கள் திராவிட மாடல் அரசு, தமிழ் இலக்கிய நூல்களை, பல்வேறு வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டு தோறும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஜி.யு.போப் அவர்களின் பெயரில் விருது வழங்கியும் சிறப்பித்து வருகிறது.

அத்தகைய பெருமைக்குரிய திரு. ஜி.யு. போப் அவர்களை சிறப்பித்து கனடா வாழ் தமிழ் மக்கள், அவரது பிறந்தகத்திலேயே உருவச்சிலையை அமைக்க இருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. இம்முயற்சியை முன்னெடுக்கின்ற கனடியத் தமிழர் பேரவைக்கும், கனடா வாழ்த் தமிழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)







தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# வடக்கில் நரம்பியல் சார் நோய்கள் அதிகரிப்பு!




அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கில் நரம்பியல் சார் நோய்தாக்கம் அதிகரித்துள்ளதாக நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் 19 யூலை 2023 புதன்கிழமை நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றது. தற்பொழுது வடக்கில் மதுபான பாவனை அதிகரித்துள்ளதன் காரணமாகவே நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. இதனால், இன்சுலின் உற்பத்தி தடைப்படுகின்றது. மதுபாவனையை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல போதைப் பொருள் பாவனையும் நரம்பியல் சார் நோய்கள் அதிகரிப்புக்கு ஒரு காரணமாக உள்ளது.

குறிப்பாக இளையவர்கள் நரம்பியல் நோய்கள் மற்றும் திடீர் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றார்கள். எனவே அதிகரித்துள்ள மது பாவனை மற்றும் போதைபொருள் பாவனையினால் அவர்கள் அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

இந்த மதுபாவனையை கட்டுப்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் நீங்களா இன்னொரு நாட்டின் விடுதலையைப் பேசுவது?

சிறிலங்காவில் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்துக் கொண்டு, பலஸ்தீனத்தின் விடுதலை பற்றியா கதைக்கின்றீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அரசாங்கத்தை கடுமையைாக சாடியுள்ளார்.

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பலஸ்தீனத்தின் விடுதலை தொடர்பான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய நாடாளுமன்றத்தில் பலஸ்தீனர்களுக்காக கதைக்கின்றார்கள். நல்லது வரவேற்கின்றோம். அது கதைக்கப்பட வேண்டிய விடயம் என்பதையும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் தமிழ் மக்களுடைய நியாயமான பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதில் எங்களுடைய அரசாங்கத்திற்கு அக்கறையில்லை.

நான் ஏன் இதைக் கூறுகின்றேன் என்றால், நீங்கள் உங்கள் நாட்டிலே இருக்கக்கூடிய இன்னொரு இனத்தை அதாவது தமிழ் பேசுகின்ற மக்களை தமிழ் மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக ஒடுக்குவது மாத்திரமல்ல அவர்களுடைய சகல உரிமைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக பறித்து இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கிக் கொண்டு, நீங்கள் இன்னொரு நாட்டிற்கு அந்த நாட்டில் உரிமையைக் கொடு என்று சொன்னால் அதாவது அந்த நாட்டுக்கு ஒரு தனிநாட்டைக் கொடு என்று சொன்னால் உலகத்திலே எவரும் அதைக் கேட்க மாட்டார்கள்.



ஏனென்றால் நீங்கள் விசுவாசமாக அதைச் சொல்லவில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அதை விசுவாசமாக சொல்ல வேண்டும். சொல்வதற்கு முதலில் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# ரணில் விக்கிரமசிங்க தமிழ்மக்களை ஏமாற்றுகின்றார்! தென்னிலங்கை சிங்களக் கட்சிகளும் கூறுகின்றன!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகிறார். அவர் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு தரமாட்டார். அவரிடம் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்திய சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. தலைவரான அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் கருத்து வெளியிடும் போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

சஜித் பிரேமதாஸ கருத்துரைக்கையில், ராஜபக்ஷக்கள் போல ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களை ஏமாற்றியே தீருவார். அவரை நம்பி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பேச்சுக்கு செல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் தான் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை இந்த நாட்டின் மக்கள் ஒருமித்து விரும்பும் தீர்வை பெற முடியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியை நிறுவுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

இதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறுகையில் தான் ரணில் ராஜபக்ஷ அல்ல ரணில் விக்கிரமசிங்க தான் என தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கூறியது நகைப்புக்குரியது. தற்போது ரணில் -ராஜபக்ஷ அரசாங்கம் தான் ஆட்சியில்உள்ளது. ராஜபக்ஷக்கள் பட்டாளத்தின் ஆசியில் தான் ஜனாதிபதி கதிரையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார். எனவே, ராஜபக்ஷக்களின் குணாதிசயங்கள் ரணிலிடம் உண்டு. அவரிடம் தமிழ்மக்கள் அவர்களின் பிரதிநிதிகள் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று கூறினார்

இதேவேளை சிங்களத் தலைவர்களுடன் பல வருடங்களாக கலந்துரையாடிய போதிலும் இறுதியில் தமிழ் சமூகத்திற்கு எதுவும் கிடைக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் சென்றிருந்த போதும் ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம் தொடர்பிலேயே கலந்துரையாடினார் என்றும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

அதன் பின்னர் தமிழ் அரசியல் தலைவர்கள் அதிகாரப் பகிர்வையே விரும்புவதாக வலியுறுத்திய போது அதற்குத் தேவையான கட்டளைச் சட்டங்களை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இதேநேரம் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அதிகாரங்கள் மேலும் பலப்படுத்தப்படும் என தான் ஜனாதிபதியிடம் வலையுறுத்தியதாகவும் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்

# அமெரிக்காவின் தலையீடு!



தமிழர் பிரச்னையில் அமெரிக்கா பார்வையாளராக இருக்கக் கூடாதென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். அண்மையில், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அமெரிக்கா தொடர்பில் தமிழ் சூழலில் அவ்வப் போது பேசப்படுவதுண்டு.

அண்மையில் உலகத் தமிழர் பேரவையின் தலைமையில் புலம்பெயர் பிரதிநிதிகள் சிலர் வாஷிங்டனில் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜதந்திரிகளை சந்தித்திருந்தனர்.

அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் அழுத்தங்களை பிரயோகிக்குமென்று வாக்குறுதியளித்ததாக சந்திப்பில் பங்கு கொண்டவர்கள் கூறியிருந்தனர். இதே போன்று, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான மூவர் அடங்கிய குழு ஒன்றும் அமெரிக்கா சென்றிருந்தது. நாடு திரும்பிய சுமந்திரன் அமெரிக்கா கடுமையான சில நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகக் கூறியிருந்தார். ஆனால், அவர் கூறியவாறு எதுவும் நடக்கவில்லை.

அமெரிக்கா இலங்கை விடயத்தில் பார்வையாளராகவும் இருக்கவில்லை பங்காளராகவும் இருக்கவில்லை. ஓர் உலக சக்தியென்னும் வகையில் அமெரிக்காவின் நீண்டகால நலன்களின் அடிப்படையில் அமெரிக்கா அதன் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

அண்மையில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு கொழும்பில் கொண்டாடப்பட்டது. ஒரு நட்புநாடு என்னும் வகையில் இலங்கையின் நலன்களில் அமெரிக்கா அதன் எல்லைக்கு உட்பட்டு ஈடுபாடு காட்டி வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி மற்றும் இராணுவ தளபாட உதவிகளை அமெரிக்கா வழங்கி வந்திருக்கின்றது. உலகளாவிய பயங்கரவாதத்தை தடுப்பதென்னும் அடிப்படையிலேயே அமெரிக்காவின் உதவிகள் அமைந்திருந்தன.

1997ஆம் ஆண்டு அமெரிக்கா விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் பெரியளவில் நன்மை பெற்றது.

யுத்தம் முடிவுற்றதன் பின்னணியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போதான மனித உரிமைகள் மீறல், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகித்து வருகின்றது.

இந்த பின்புலத்தில் தான் 2012இல் இலங்கையின் மீதான முதலாவது பொறுப்புக் கூறல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அப்போதைய ஒபாமா நிர்வாகத்தின் முயற்சியாலேயே அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்காவின் அணுகுமுறையை நோக்கினால் ஒரு விடயத்தை காணலாம். அதாவது, அமெரிக்காவின் அணுகுமுறை இலங்கையை மையப் படுத்தியதே தவிர தமிழ் மக்களை பிரத்தியேகமாகக் கொண்டதல்ல.

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், நல்லாட்சியை (20ம் பக்கம் பார்க்க)

# காணிகளை விடுவிப்பதற்கான வடக்கு கிழக்கு மக்களின் கோரிக்கை நியாயமானது - பவித்திரா



வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் காணிகளை விடுவிக்குமாறு முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானவையாகும். அப்பகுதிகளில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அவை நிச்சயம் விடுக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பாலான மக்கள் தமக்கு உரிமமுடைய காணிகளை கை விட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் 30 ஆண்டுகளின் பின்னர் இவை காடுகளாகியுள்ளன. இவற்றில் தொடர்ந்தும் வன வள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் வைத்திருக்க வேண்டிய காணிகளும் உள்ளன. மேலும் பல காணிகள் உண்மையில் 1985இல் உரிமம் காணப்பட்ட மக்களின் இடங்களாகும்.

எனவே யுத்தம் காணரமாக தம்மால் கைவிட்டுச் செல்லப்பட்ட தமது முதாதையரின் காணிகளை விடுவிக்குமாறு அந்த மக்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் நியாயமானவையாகும். எவ்வாறிருப்பினும் அவை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. எனவே இது தொடர்பில் விரிவான தகவல்களை வெளிப்படுத்த முடியாது. எவ்வாறிருப்பினும் மக்களுக்குரிய காணிகள் நிச்சயம் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாவுள்ளோம். அரசாங்கமும் அதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது என்றார்.

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த அனைத்துக்கட்சிகளின் ஆதரவு தேவையில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும். 13ஐ நடைமுறைப்படுத்த அவருக்கு அனைத்துக்கட்சிகளின் ஆதரவும் தேவையில்லை. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். பாராளுமன்றத்தின் பெரும் பான்மைபலத்துடனேயே பதவியில் இருக்கிறார். இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ராஜபக்ஷக்கள் எம்மை ஏமாற்றியது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எம்மை ஏமாற்றலாம் என்று தப்புக் கணக்கு போடுகிறார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் தமிழர் நலனில் அதிக சிரத்தையுடன் செயல்படுகிறது என்பதை ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும். ஜனாதிபதி இந்தியாவுக்கு செல்லும் முன்னர் சந்திப்பை நடத்தியது எங்களை சர்வதேசத்தை சமாளிப்பதற்கே. எனினும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பதில் நாம் விடாப்பிடியாகநிற்கிறோம்.

முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் தான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறும் காரணத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலத்துடனேயே அவர் பதவியில் இருக்கிறார். எனவே, அவர் நினைத்தால் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும்.

நாம் எமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குகடிதம் மூலம் அனுப்பியுள்ளோம் என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா பெற்றுக் கொடுத்த 13வது திருத்தத்தை அமுல்படுத்த தமிழ்நாடு காங்கிரஸ் வலியுறுத்து!

இலங்கை தமிழர்களுக்கான 13வது சட்டத்திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

ஜீலை 21ஆம் தேதி அன்று பிரதமர் மோடியை இலங்கை ஜனாதிபதி சந்தித்து பேசவுள்ளதால் இக்கோரிக்கை மீண்டும் வலுப்பெற்று வருகிறது. ராஜிவ்காந்தி பிரதமராக இருந்த போது இலங்கைத் தமிழர்களுக்காக பெற்றுத் தந்த உரிமைகள் அனைத்தும் பிரதமர் மோடி ஆட்சிக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு வருவதாக காங்கிரஸ் குற்றஞ் சாட்டியுள்ளது.

இலங்கை தமிழர்களுக்கான 13வது சட்டத் திருத்தம் பற்றியும் அது ஏற்படுத்தப்பட்டதன் பின்னணி குறித்தும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியிருப்பதாவது

ஒப்பரேசன் லிபரேசன் இலங்கை தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்த இன்னலைப் போக்கிட தீவிர முயற்சிகளை மேற் கொண்டவர் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி. பல்வேறு முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பகுதி முழுவதற்கும் ஒப்பரேசன் லிபரேசன் என்ற பெயரில் இலங்கை அரசு பொருளாதார தடை விதித்ததால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அப்பாவி தமிழர்கள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளானார்கள்.

இந்நிலையில் இலங்கை தமிழர்களின் துயரை துடைப்பதற்காக பிரதமர் ராஜிவ்காந்தி ஆணையிட்டதன் பேரில் ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து உணவுப் பொருட்கள் மற்றும் எரி பொருட்கள் ஏற்றிய 19 படகுகள் 3.6.1987அன்று இலங்கையின் வடக்கு பகுதிக்கு அனுப்பப்பட்டன. ஆனால் நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த படகுகளை இலங்கை அரசின் கடற்படை அனுமதிக்காமல் தடுத்ததால் இந்திய அரசின் படகுகள் ராமேஸ்வரம் நோக்கி திரும்பி வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கை தமிழர்கள்: பொருளாதார தடையினால் பாதிக்கப்பட்ட அப்பாவி இலங்கை தமிழர்களுக்கு உதவிகளை செய்ய வேண்டுமென்று பிரதமர் ராஜிவ் காந்தி முடிவெடுத்து பெங்களூர் விமான



தளத்திலிருந்து 5 இந்திய விமானங்கள் மூலம் இலங்கையின் ஆகாய பகுதிக்குள் அத்துமீறி பிரவேசித்து பாராசூட் மூலம் வடக்கு மாகாணத்தில் வாழ்கிற இலங்கை தமிழர்களுக்கு 24 டன் நிவாரணப் பொருட்கள் பூமியை நோக்கி கீழே இறக்கப்பட்டன. உண்ண உணவின்றி அல்லலுற்ற அப்பாவி தமிழர்கள் இந்திய அரசு வழங்கிய உணவுப் பொருட்களை பெற்று மகிழ்ச்சி கடலில் திளைத்தனர்.

1987 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 4 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆகாய நடவடிக்கை ஒப்பரேசன் பூ மாலை– என்று அழைக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இனியும் இந்தியாவை பகைத்துக் கொள்வது இலங்கை அரசுக்கு நல்லதல்ல என்று முடிவுக்கு வந்ததனால் உருவானது தான் ‘இந்திய – இலங்கை உடன்பாடு’. இந்த உடன்பாட்டில் இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க இந்திய பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களும் 29.7.1987 அன்று கொழும்பு நகரில் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இந்திய இலங்கை உடன்பாட்டினால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இந்தியாவில் உள்ள மாகாணங்களைப் போல ஒரே மாநில நிர்வாக சுயாட்சியுடன் கூடிய அரசு உருவாகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. 1956 முதல் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற நியாயமற்ற நிலை மாறி தமிழும் ஆட்சி மொழி என்ற சம உரிமை பெற்றது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை பாராளுமன்றத்தில் அரசமைப்புச் சட்டத்தில் 13-வது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இலங்கை தமிழர்களின் உரிமைகளுக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

13வது சட்டத் திருத்தம்: இந்த சட்டத் திருத்தம் தான் இன்றைய இலங்கை தமிழர்களின் பாதுகாப்பு கவசமாக விளங்கி வருகிறது. ஆனால் அந்த சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு எந்த முயற்சியும் செய்யாமல் அதை சீர்குலைக்கிற முயற்சியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13-வது சட்டத் திருத்தத்தின்படி சிங்களர்கள் பெரும்பான்மையாக வாழும் ஏழு மாகாணங்கள் உள்ளிட்ட மொத்தம் 9 மாகாணங்களில் அதிகாரப் பரவலை இந்த பிரிவு வழங்குகிறது. இதன் மூலம் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க கோரிக்கையான சுயாட்சியை வழங்க இந்த பிரிவு உறுதி செய்கிறது. இந்நிலையில் 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை செயல்படுத்துவதற்கு பதிலாக வளர்ச்சித் திட்டங்கள் அரசியல் அதிகாரப் பரவல் உள்ளிட்ட திட்டங்களை இலங்கை ஜனாதிபதி தமிழ் அமைப்புகள் கூட்டத்தில் முன்வைத்திருக்கிறார். இதன் மூலம் போகாத ஊருக்கு அவர் வழிகாட்டியிருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்க கோரிக்கையை தமிழ் அமைப்புகள் நிராகரித்திருக்கிறார்கள். அதோடு போலீஸ் அதிகாரம் இல்லாமல் 13-வது சட்டத் திருத்தம் அமல்படுத்தப்படும் என்பதும் இலங்கை அரசின் திட்டமாக இருக்கிறது. இலங்கை அரசு கடந்த காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதை சுட்டிக் காட்டி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும்இசர்வதேச சமுதாயத்திற்கும் ஆர்..சம்மந்தன் கடிதம் எழுதியிருக்கிறார். நிலப் பதிப்பு மற்றும் போலீஸ் அதிகாரத்தை பறிப்பதும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கிறது. இதன் மூலம் மாகாணங்களுக்கு சுயாட்சியை வழங்க வழிவகையும் செய்யும் 13-வது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு தொடர்ந்து முடக்கி வருவதையும் தமது கடிதத்தில் பிரதமர் மோடிக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜீலை 21ல் சந்திப்பு: எனவே ஜஜீலை 21 ஆம் தேதி இந்திய பிரதமரை சந்திக்க வருகிற இலங்கை இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் தங்களது உரிமைகளை வலியுறுத்தி பாதுகாப்பு தர வேண்டுமென்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியிருக்கிறார். எனவே இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அன்றைய பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களால் இலங்கை தமிழர்களுக்காக போராடி பெறப்பட்ட 13-வது சட்டத் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும்.

பெற்றுத் தந்த உரிமைகள்: ஏற்கனவே இந்தியாவுக்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் பிரதமர் நரேந்திர மோடி ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அன்றைய பிரதமர் ராஜிவ்காந்தி அவர்கள் பெற்றுத் தந்த உரிமைகள் பிரதமர் மோடி ஆட்சிக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு முடக்கப்பட்டு வருவதை பிரதமர் மோடி உணர்ந்து செயல்பட வேண்டும் என்று உள்ளது.

# வடக்கு கிழக்கில் புதிதாக 71 விகாரைகள் அமைக்கப்பட்ட விபரங்களை கனடிய தூதுவரிடம் கையளித்தார் ஸ்ரீதரன் எம்.பி

2009க்குப் பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக 71 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விவரண அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸஜீக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று 17 யூலை 2023 திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில், ஈழத்தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது மனப்பூ ர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் ஈழத்தமிழரகளின் அரசியல் உரித்துகளை நிலைநாட்டுதல், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றின் காலத் தேவை, 13வது திருத்தச் சட்டத்துக்கும் சமஸ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13வது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா, அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஸ்டி முறைமையை அடிப்படையாகக் கொண்டு அதிலும் குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஸ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள், 13வது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கத் தக்கதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண அரசுக்கு வழங்கப்பட்டிருந்தும் கூட, வடக்கு கிழக்கின் 80வீதமான நிலங்கள் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், கனியவளத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றால் தொடர்ச்சியாக பறிக்கப்படுகின்றமை, இன, மத, மொழி ரீதியான



வலிந்த ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இவை தவிர இலங்கையில், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் பெண்களின் அரசியல் வகிபாகம் மிகக் குறைந்தளவில் காணப்படுவதன் காரணம் குறித்தும், அதன் யதார்த்த நிலைப் பின்னணிகள், குடும்ப மற்றும் சமூகச் சூழல் என்வை குறித்தும் கனேடிய உயர்ஸ்தானிகர், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் (20ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 யூன் 2023 முதல் 21 யூலை 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மராஜ் ராஜா (பத்தன்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்று அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாள் 21 யூன் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மராஜ் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 93வது பிறந்த நாள் நினைவாக



### திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி அவர்களது 93வது பிறந்த நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் 27 யூன் 2023 செவ்வாய்க்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசபாபதி சிவயோகலெட்சுமி அவர்களது பிறந்த நாளை நினைவு கூர்ந்து அன்னாரைப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசையா மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களின் 11வது ஆண்டு நினைவு நாள் 29 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மகேஸ்வரி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவுநாள் 01 யூலை 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி னார்கள். திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடைய குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை சங்கரப்பிள்ளை

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய பொறியியலாளர் திரு கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 08 யூலை 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம்

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 10 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மருதப்பு செல்வராஜா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மருதப்பு செல்வராஜா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 12 யூலை 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மருதப்பு செல்வராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த மாதம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




21 யூன் 2023 புதன்கிழமை யாழ்.உடுவிலைச் சேர்ந்த பத்தன் என்று அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 யூன் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு நகுல் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





24 யூன் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி மகாலிங்கம் லலிதாம்பாள் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி மகாலிங்கம் லலிதாம்பாள் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 யூன் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிருஷன் கோணேஸ்வரனின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




24 யூன் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் சுதர்சன் செல்வி நிவேதிகா ஆகியோர் திருமண வாழ்வில் இணையும் இனிய நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 25 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




27 யூன் 2023 செவ்வாய்க்கிழமை அல்லைப்பிட்டியைச் சேர்ந்த அமரர் திருமதி இரத்தினசபாபதி சிவயோகலட்சுமி அவர்களது 93வது பிறந்த நாளாகும். அன்றைய நாளில் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 யூன் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீரங்கநாதன் சரோஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிகிர்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிகிர்தன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




29 யூன் 2023 வியாழக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசையா மகேஸ்வரி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 யூலை 2023 சனிக்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு வைரமுத்து சாமுவேல் செல்வரெத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு வைரமுத்து சாமுவேல் செல்வரெத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




06 யூலை 2023 வியாழக்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கதிர்காமு பாலசுந்தரம் அவர்களது 100வது பிறந்த நாள் நினைவு நாளும் 6வது ஆண்டு நினைவு நாளும் ஆகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 யூலை 2023 சனிக்கிழமை புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சங்கரப்பிள்ளை கனகசபை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 யூலை 2023 திங்கட்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சேவரத்தினா ஜெயபாலசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 யூலை 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி யூட் ஞானேந்திரன் லாவண்யா இணையரது 18வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் தங்கள் பிளட்ளைகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




12 யூலை 2023 புதன்கிழமைபுங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மருதப்பு செல்வராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்)
## ஐயனார் அலங்கார உற்சவம்
## (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

கொடியேற்றம் (ஐயப்பன்)
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

ஐயனார் உற்சவ ஆரம்பம்
28-07-2023 வெள்ளி

தேர்த்திருவிழா
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிசேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)
06-08-2023ஞாயிறு

அபிசேகம்
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

பூங்காவனம்:
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை


வைரவர் மடை
08-08-2023 செவ்வாய் மாலை

## கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.

ஸ்ரீ
ஐயனார் துணை



காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிட ரெண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரண புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்

# கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்

கனடிய அனலைதீவு ஸ்ரீபூரணை புட்கலாம்பிகா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் திருக்கோயில்

22 Goodmark Place #13, Etobicoke, ON, M9W 6R2, Tel : 416.679 9899

Facebook : ANALAITIVU IYANAR TEMPLE OF CANADA

## சோபகிருது வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்

**29.07.2023 தொடக்கம் 08.08.2023 வரை**

ஐயன் மெய்யடியார்களே

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் ஆடித்திங்கள் 13ம் நாள் 29.07.2023 சனிக்கிழமை துவாதசி திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ பூரணை புட்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் பெருமானுக்கு பகல் 12.00 மணிக்கு துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

## மஹோற்சவ கால நிகழ்வுகள்

| கொடியேற்றம் 29.07.2023 | வேட்டை, சப்பறம் 05.08.2023 | தேர்த்திருவிழா 06.08.2023 |
|---|---|---|

| | |
|---|---|
| 29.07.2023 | சனிக்கிழமை கொடியேற்றம் |
| 30.07.2023 | ஞாயிற்றுக்கிழமை 2ம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம் |
| 31.07.2023 | திங்கட்கிழமை 3ம் திருவிழா |
| 01.08.2023 | செவ்வாய்க்கிழமை 4ம் திருவிழா |
| 02.08.2023 | புதன்கிழமை 5ம் திருவிழா |
| 03.08.2023 | வியாழக்கிழமை 6ம் திருவிழா |
| 04.08.2023 | வெள்ளிக்கிழமை 7ம் திருவிழா |
| 05.08.2023 | சனிக்கிழமை 8ம் திருவிழா வேட்டைத்திருவிழா, சப்பரத்திருவிழா |
| 06.08.2023 | ஞாயிற்றுக்கிழமை 9ம் திருவிழா தேர்த்திருவிழா |
| 07.08.2023 | திங்கட்கிழமை 10ம் திருவிழா, தீர்த்தோற்சவம், கொடியிறக்கம் |
| 08.08.2023 | செவ்வாய்க்கிழமை மாலை 05.00 பூங்காவனம் திருக்கல்யாணம் |
| 09.08.2023 | புதன்கிழமை வைரவர் மடை |

முக்கிய குறிப்பு : கொடியேற்றம், வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா தீர்த்தத்திருவிழா தவிர்ந்த ஏனைய நாட்களில் பூசை நேரம்

| கொடியேற்ற நிகழ்வு | பகல் திருவிழா | இரவு திருவிழா |
|---|---|---|
| 06.00 மணி காலை பூசை | 07.00 மணி காலை பூசை | 04.45 மணி உருத்திர கும்ப அபிஷேகம் |
| 07.00 மணி நவகலச அபிஷேகம் | 08.00 மணி நவகலச அபிஷேகம் | 06.30 மணி விஷேட பூசை |
| 09.00 மணி விஷேட பூசை | 10.00 மணி ஸ்தம்ப பூசை | 07.00 மணி ஸ்தம்ப பூசை |
| 10.00 மணி வசந்த மண்டப பூசை | 11.30 மணி வசந்த மண்டப பூசை | 08.00 மணி வசந்த மண்டப பூசை |
| 12.00 மணி கொடியேற்றம் | 01.00 மணி பிரசாதம் வழங்கல் | 09.30 மணி பிரசாதம் வழங்கல் |

தேர்த்திருவிழா : காலை 8.30 மணி வசந்த மண்டபபூசை காலை 10.30 மணி சுவாமி தேரில் எழுந்தருளல்

சப்பரத்திருவிழா மற்றும் தேர்த்திருவிழாவின் போது காவடி, கற்பூரச்சட்டி, பாற்குடம் மற்றும் நேர்த்திகள் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யவும். மேலும் ஒவ்வோர் இரவுத் திருவிழாவின் போதும் நாதஸ்வர, தவில் இசைக்கச்சேரி மற்றும் இன்னிசை, பரதநாட்டிய நிகழ்வுகளும் இடம் பெறும்.

சக ஆலய அறங்காவலர்கள், குருமார்கள் மற்றும் அடியார்கள் அனைவரையும் திருவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய குருமார்கள் – சிவாகம பிரவீணா ஐயப்பா சேவா ரத்னா சிவ ஸ்ரீ பிரசாத் குருக்கள், ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் சர்மா

மஹோற்சவகுரு

ஆகமகலாரத்ணம், ஆகமபிரவிணா கிரியா தத்வநிதி, கிரியா பூஷணம் சாதகலா மணி, அலங்கார பூஷணம்,

**ஈசான சிவாச்சார்யார் சிவஸ்ரீ சி. சந்திரகுமாரகுருக்கள்**

(முன்னாள் குருமணி - ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம் - கொழும்பு)

திருவிழா நாட்களில் உங்களால் இயன்ற பால், தயிர், நெய், பூ, அன்னதானப் பொருட்கள்
அபிஷேக திரவியங்களை ஆலயத்திற்கு வழங்கி ஐயனார் அருள் பெற வேண்டுகின்றோம்.
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

இங்ஙனம்

சுபம்

ஆலய அறங்காவலர் சபை, உபயகாரர்கள்

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த மாதம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




16 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு S.A.S சேவியர் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 யூலை 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாஸ்கரன் தர்மினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜெஸ்சனின் 18வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜெஸ்சன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





20 யூலை 2023 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




20 யூலை 2023 வியாழக்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடவை வாழ்விடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் அமரத்துவமடைந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 யூலை 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பாலாம்பிகை ஜெகதீஸ்வரன் குடும்பத்தினர் சீரடி பாபா உபயமாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




21 யூன் 2023 புதன்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# 1வது ஆண்டு நினைவஞ்சலி



கோப்பாயைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்து
தாயகத்தில் அமரத்துவமடைந்த

## திரு தவசீலன் சுப்பையா

மலர்வு:- 20.02.1968 உதிர்வு:- 31.07.2022

அப்பா!
கடவுளாய் காண்கிறோம்! காத்திடுவீர் காலமெல்லாம்!
ஆண்டொன்று மின்னலாய்க் கடந்தது ஆயினும்
சற்றேனும் ஆறவில்லை எங்கள் மனம்!

பாசத்தால் பிணைந்த எங்கள் வாழ்வும்
நேசத்தால் மிளிர்ந்த எங்கள் பந்தமும்
நீண்டு நிலைத்திருக்கும் எம்மோடு என
நாங்கள் தான் நினைத்து இருந்தோம்

காலனிட்ட கணக்கோ எதிர்மறையாய்ப் போயிற்றே
நீங்கா நினைவுகளை எம்மோடு விட்டு விட்டு
வெகுதூரம் சென்றுவிட்ட உங்களை நாம்
ஒருமுறை தன்னும் கண் முன்னே காண்பதற்காய்
இக்கணமும் எக்கணமும் துடியாய்த் துடிக்கின்றோம்

காலமெலாம் காவலனாய் காத்திடுவீர் நீங்களென
கடவுளாய்க் காண்கின்றோம் காத்திடுவீர் காலமெல்லாம்.

தகவல்:-மனைவி பிள்ளைகள்
தொடர்புகளுக்கு:-கபிசன் 647 675 7758

# காற்றுவழிக் கிராமத்தில் ஒரு கண்ணகியம்மன்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



24 யூன் 2023 புங்குடுதீவில் நடந்த கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நோக்கிப் புலம் பெயர்ந்த தமிழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்தார்கள். 1991ஆம் ஆண்டு தீவில் நிகழ்ந்த இடப்பெயர்வுகளின் பின் புங்குடுதீவை நோக்கி இவ்வளவு தொகையான மக்கள் திரண்டு வந்தமை இதுதான் முதல் தடவை.

அண்மை ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இவ்வாறு வெவ்வேறு நிகழ்வுகளை நோக்கி ஒன்றுதிரளக் காணலாம். அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, சில நாட்களுக்கு முன் மெத்தடிஸ்ட் மகளிர் கல்லூரி போன்றன தமது இரு நூறாவது ஆண்டு விழாவை கொண்டாடிய போது பழைய மாணவர்களும் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நிகழ்வுகளை நோக்கித் திரண்டார்கள். மிகச் செழிப்பாக பண உதவிகளைச் செய்தார்கள். சில பாடசாலைகளுக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் வழங்கும் உதவிகள் கோடிக்கணக்கானவை.



கண்ணகி அம்மனுக்கும் அவ்வாறு கோடிக்கணக்காக காசு திரட்டப்பட்டிருக்கிறது. கிடைக்கும் தகவல்களின் படி அக்கோவிலை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 90கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோயிலின் ஒவ்வொரு தூணுக்கும் தலா 5லட்சம் ரூபாய் புலம் பெயர்ந்த ஊர்வாசிகளிடமிருந்து திரட்டப்பட்டிருக்கிறது. மொத்தம் 200க்கும் குறையாத தூண்கள் அங்கே உண்டு. கும்பாபிஷேகத்திலன்று ஒரு புலம் பெயர்ந்த தமிழர் கிட்டத்தட்ட ஏழரை லட்சம் ரூபாய் செலவழித்து பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக ஐஸ் கிரீம் விநியோகித்தார். கடந்த மூன்று தசாப்தங்களின் பின் புங்குடுதீவை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்த ஒரு நிகழ்வு அது.

இலங்கைத்தீவில் மட்டுமல்ல இப் பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகள் அதிகமுடைய ஒரு பிரதேசமாக தீவுப் பகுதியைக் குறிப்பிடலாம். குறிப்பாக புங்குடுதீவில் உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி 4000க்கும் சற்று அதிகமான மக்கள் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது. பேராசிரியர் குகபாலன் 4000க்கும் குறைவான மக்களே அங்கே இருப்பதாகக் கூறுகிறார். புங்குடுதீவும் உட்பட பெரும்பாலான தீவுப்பகுதிகளில் சனத்தொகை குறைவு. ஆளற்ற வீடுகளே அதிகம்.

ஒரு காலம் தேவாலயங்களின் பட்டினம் என்று வர்ணிக்கப்பட்ட ஊர்காவற்துறை இப்பொழுது கைவிடப்பட்ட வீடுகளின் பட்டினமாக மாறி விட்டது. அங்கெல்லாம் பழம்பெரும் வீடுகளைச் சூழ்ந்து காடு வளர்ந்து கிடக்கின்றது. அப்படித்தான் நெடுந்தீவிலும். தீவுகளில் சன நடமாட்டம் குறைந்த காரணத்தால் அங்கே குற்ற செயல்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. புங்குடுதீவில் வித்யா படுகொலை, நெடுந்தீவில் புலம்பெயர்ந்தவர்களும் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமை, அனலைதீவில் நடந்த கொலை முயற்சியில் ஒரு புலம் பெயர்ந்த தமிழர் காயங்களுடன் தப்பியமை போன்றவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தீவுகள் இடம்பெயரத் தொடங்கியது போரினால் மட்டும் அல்ல. பொருளாதாரக் காரணங்களுக்காகவும் தான். குடிநீர் ஒரு முக்கிய பிரச்சினை. அது தவிர கல்வி, மருத்துவ,தொழிற் தேவைகளுக்காகவும் மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தார்கள். இப்பொழுதும் இடம் பெயர்கிறார்கள். அயலில் ஆட்கள் இல்லையென்றால் தனித்து விடப்பட்ட வீடுகளுக்கு இயல்பாகவே பயம் தொற்றிக் கொள்ளும். அது மேலும் இடப்பெயர்வை ஊக்குவிக்கும்.

போர்,இடப்பெயர்வை வாழ்வின் ஒரு பகுதியாக்கியது. போர்க்காலத்தில் மக்கள் தொகையாக இடம்பெயரும் ஒரு போக்கு முதலில் தீவுகளில் தான் தொடங்கியது. முதலில் காரைநகர். அதன்பின் லைடன்தீவுகள் என்று அழைக்கப்படும் ஊர்காவற்துறையும் உள்ளிட்ட தீவுகள்.முடிவில் முழு யாழ்ப்பாணமும் இடம்பெயர்ந்தது. இவ்வாறு ஆளற்றுப் போன தீவுகளைப்பற்றி புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் சு.வில்வரத்தினம் எழுதிய கவிதைத் தொகுப்புக்குப் பெயர் காற்றுவழிக் கிராமம்

தீவுகளில் இருந்து மக்கள் மேலும் வெளியேறுவார்களாக இருந்தால் அங்கு ஒரு மாகாண சபை உறுப்பினரைக் கூட தெரிவு செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் போய்விடும். ஒரு காலம் அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யுமளவுக்கு 36 ஆயிரத்துக்கும் குறையாத வாக்காளர்கள் வசித்தார்கள். எனவே தீவுகளை நோக்கி எப்படி ஆட்களை கொண்டு வரலாம் என்று சிந்திப்பதே தீவுகளில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் முன்னால் உள்ள முக்கிய பொறுப்பாகும். ஒரு நாள் திருவிழாக்கள், சில நாள் கொண்டாட்டங்களை நோக்கி மக்களைத் திரட்டுவதற்கு மப்பால், தமது தாய்க் கிராமத்தை நோக்கி என்றென்றும் மக்கள் திரளக் கூடிய பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் தொடக்க காலத்திலேயே தீவுகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் புலம்பெயர்ந்தார்கள். அவர்களில் சிலர் தமது சொந்தத்தீவுகளில் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். எழுவைதீவில் மருத்துவர் நடேசன் கட்டிய வைத்தியசாலை. அனலைதீவின் நீட்சியாகவுள்ள புளியந்தீவில், ஒரு வீடமைப்புத் திட்டம், புங்குடுதீவில் சுற்றுச் 15 சூழல் மேம்பாட்டு திட்டங்கள் போன்ற சில உதாரணங்களை இங்கு சுட்டிக் காட்டலாம்.

வடமாகாணசபை இயங்கத் தொடங்கிய போது முதலமைச்சரிடம் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பா. அகிலன் தீவுகளை மையமாகக் கொண்ட ஒரு சுற்றுலாத் திட்டத்தை முன்வைத்தார். ஒவ்வொரு தீவிலும் எது தனித்துவமானதோ, அதை மையமாகக் கொண்டு சுற்றுலா வலையமைப்பு ஒன்றை உருவாக்குவது ஒவ்வொரு தீவிலும் என்னென்ன பாரம்பரிய உணவு வகைகள் கிடைக்குமோ அவற்றுக்குரிய உணவகங்களை உருவாக்குவது. தீவுகளை இணைக்கும் படக்குச்சேவைகளை அல்லது மிதக்கும் விருந்தகங்களை உருவாக்குவது. ஆனால் அத் திட்டத்தை வடமகாணசபை அதிகாரிகள் ஆர்வத்தோடு அணுகவில்லை என்று தெரிகிறது.

அதுபோலவே சில ஆண்டுகளுக்கு முன் மூன்று தீவுகளை மையமாகக் கொண்டு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் முதலில் சீனாவிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக அது இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளிலும் அவ்வாறு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்கள் நிறுவப்படும். ஆனால் இந்தியா அத் திட்டங்களைப் பொறுப்பெடுத்த பின் இலங்கை அரசாங்கம், நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ரீதியிலான முட்டுக் கட்டைகள் உருவாக்கி வருவதாகச் ஒரு தகவல் தீவுகளை மையமாகக் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கடலட்டை பண்ணைகளும் விவாதப் பொருட்களாக மாறின.கடலட்டை, மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் போன்றவற்றின்மூலம் தீவுப்பகுதியின் சனக் கவர்ச்சி அதிகரிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் புவிசார் அரசியல் போட்டிக்குள் தீவுகளும் சிக்குண்டு விட்டன என்பது மட்டும் தெரிகின்றது.

தீவுகளுக்கென்று தனித்துவம் உண்டு. அதில் முக்கியமானது, தீவுகளில் இருந்து எழுச்சி பெற்ற கவர்ச்சிமிகு வணிகப் பாரம்பரியம் ஆகும். தீவுகளைச் சேர்ந்த வணிகர்கள் முறைசார் படிப்புக்களுக்கூடாக வந்தவர்கள் அல்ல. ஆனால் பரம்பரை பரம்பரையாக திரட்டப்பட்ட பட்டறிவுக் கூடாக பெரு வணிகர்களாக எழுந்தவர்கள். தீவுகளுக்கேயான தனித்துவம் மிக்க, நூதனமான அந்தப் பட்டறிவை முறைசார் புலமைப் பரப்புக்குள் உள்வாங்கினால் என்ன? தீவுகளை மையமாகக் கொண்டு வணிகக் கல்லூரிகளை உருவாக்கினால் என்ன? எதைச் செய்தால் தீவுகளை சனக் கவர்ச்சி மிக்கவைகளாக மாற்றலாம்?

ஒவ்வொரு ஆண்டும் நயினாதீவை நோக்கி லட்சக்கணக்கானவர்கள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாரும் வில்வரத்தினத்தின் காற்றுவழிக் கிராமங்களை கடந்து தான் போகின்றார்கள்.

கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்திற்காக உள்ளூரில் வேலைக்கு ஆட்களைப் பெற்றுக் கொள்வதில் நிறையத் தடைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. கோயிலைத் துப்புரவாக்குவதற்கு உள்ளூரில் ஆட்ளைப் பிடிப்பது கஷ்டமாக இருந்ததாம். தீவுகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் நிலைமை அதுதான். சுவாமி தூக்க ஆளில்லை.சில ஆண்டுகளுக்கு முன் புங்குடுதீவில் வில்வரத்தினத்தின் நினைவுநாளைக் கொண்டாடினார்கள். அம்பலவாணர் அரங்கில் கால்வாசிக்குக் கூட மக்கள் நிரம்பவில்லை. அதிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களே அதிகம். ஆனால் நீண்ட ஆண்டுகளின் பின் கண்ணகியம்மன் கோயிலை நோக்கி புங்குடுதீவு மீண்டும் திரண்டு வந்திருக்கிறது.

கண்ணகியம்மன் கோவிலுக்கு வேறு ஒரு முக்கியத்துவமும் உண்டு.1971 ஆம் ஆண்டு அங்கு நடந்த சாதி எதிர்ப்புப் போராட்டம் பிரசித்தமானது. ஈழத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய மிக முக்கியமான சிந்தனையாளர்களில் ஒருவரும் வில்வரத்தினத்தின் ஆசிரியருமான மு.தளையசிங்கம் அப்போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அங்குள்ள கிணற்றில் சாதி ரீதியாகத் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதை எதிர்த்துத் தளையசிங்கம் போராடினார்.

ஒருகாலம் சாதிரீதியாக தாழ்த்தப்பட்டவர்களை ஆலயங்களுக்குள் அனுமதிக்க மறுத்தவர்களுக்கும் குடிநீர்க்கிணறுகளைத் தடுத்தவர்களுக்கும் எதிராகப் போராட வேண்டியிருந்தது. ஆனால் இன்றைக்கு அவ்வாறு தடுத்தவர்களின் ஆளில்லா வீடுகளில் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களே வந்து குடியிருக்கும் ஒரு நிலை. ஆனால் அந்த வீடுகளை அதில் இப்பொழுது குடியிருப்பவர்களுக்கு சொந்தமாக எழுதிக் கொடுப்பதற்கு வீட்டின் உரிமையாளர்கள் தயாரில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேசமயம் ஊர்காவற்துறை கரம்பன் மேற்கில் (20ம் பக்கம் பார்க்க)

EELANADU 21 July 2023 ஈழநாடு

# தமிழ்க்கட்சிகளுக்கு அரசியல் நீரழிவு நோய்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



கரும்பு இனிக்குமா? கசக்குமா? என்ற விவாதம் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் சூடு பிடித்துள்ளது. அரசியல், ஊடகப் பரப்புடன் தொடர்ச்சியான அவதானிப்புக் குறைந்தவர்கள், அதென்ன கரும்புக் கதை? என்று ஆச்சரியமாகக் கேட்கக் கூடும். அந்தக் கதை இது தான்.

வடக்கில் வவுனியா மாவட்டத்தில் கரும்பு ஆலையை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதியைக் கேட்டிருக்கிறது வெளிநாட்டு நிறுவனமொன்று. இது நடந்தது 2018 இல். அது நல்லாட்சி அரசாங்கக் காலம். 2018 ஜீலையில் தாய்லாந்துப் பிரதமர் பிரயுத் சான்ஓசா, அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்திருந்தார். அந்த வருகையின் போது பல விடயங்கள் பேசப்பட்டன. சில உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. அப்படிப் பேசப்பட்டவற்றில் ஒன்று தான் இந்தக் கரும்பு ஆலை விடயமும்.



சுமார் 500 மில்லியன் டொலரில் மிகப் பெரிய கரும்பு ஆலையை நிறுவுதற்கென தாய்லாந்து நிறுவனத்தின் பேரில் தாய்லாந்துப் பிரதமர் கேட்ட திட்டத்துக்கு, மைத்திரிபால சிறிசேனா, அன்றைய பிரதமர் ரணில் விக்கிரசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இரா. சம்மந்தன் என அனைவரும் சம்மதம் தெரிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சம்மந்தனைச் சந்தித்த பிரயுத் சான் ஓசாவிடம் வடக்கில் முதலீடு செய்வதைப் போல கிழக்கிலும் தாய்லாந்து முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தார் சம்மந்தன். பின்னர் இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்புக் கூட நடந்தது. அதிலும் இந்த விடயத்தைச் சம்மந்தன் பேசினார்.

இதற்குப் பின்னர், இந்தத் திட்டம் தொடர்பாக வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது இந்தத் திட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளித்தனர். அன்று அரசாங்கத்துக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டபடியால் இது விவாதப் பொருளாகவில்லை.

அதற்குப் பிறகு அன்றைய அமைச்சரவையில் இதற்கான பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் அடுத்த கட்டமாக திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆட்சிக் குழப்பம் ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவை நிராகரித்து விட்டு மகிந்த ராஜபக்ஸவை பிரதமராக்கினார், மைத்திரிபால சிறிசேன. அதனால் எல்லாமே தடைப்பட்டன. அதற்குப் பிறகு உருவான அமைச்சரவையில் மீண்டும் இந்தத் திட்டத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் சில திருத்தங்களுடன் மேற்கொள்ளப்பட்டது.

இருந்தாலும் அதுவும் நடைமுறைப்படுத்த முடியாமல் தடைப்பட்டது. காரணம், அன்று உலகம் முழுவதையும் ஆட்கொண்டிருந்த கொவிட் 19 இன் தாக்கம். அது நீங்க, இலங்கையில் மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கோத்தபாய ராஜபக்ஸ ஆட்சிக்கு வந்தார். அவர் இந்தத் திட்டத்துக்கான அனுமதிக்கு மீண்டும் சில மாற்றங்களைச் செய்து அமைச்சரவை அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்தார். அதற்கும் அங்கீகாரம் கிடைத்தது. அதை நடைமுறைப்படுத்துவதற்கிடையில் கோத்தபாய ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார்.

இப்படி இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படாமல் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்த பின், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பரிகாரம் காணும் வகையில் என்னென்ன திட்டங்கள் கிடப்பில் உள்ளன? என்னென்ன திட்டங்கள் தேக்கத்தில் உள்ளன. என்று ஆராய்ந்திருக்கிறார். அப்படியான சூழலில் அடையாளம் கண்டு, மீண்டும் மேசைக்கு வந்ததே இந்தத் திட்டம்.

இதனை ஆராய்ந்த ஜனாதிபதி, பூர்வாங்க வேலைகள் எல்லாமே முடிந்த நிலையில் இருந்த இந்தத் திட்டத்தை சில மெருகு படுத்தலுடன் மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அப்பொழுது தான் இது விவகாரமாக மாறியது.

முன்னர் சம்மதித்த தமிழ்த் தரப்புகள் இப்பொழுது இரண்டு, மூன்றாக உடைந்து விட்டன. முன்னரைப் போல ஆட்சியிலும் தமிழ்த்தரப்புகள் பங்கேற்கவில்லை. தவிர, இந்தத் திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ மட்டும் தான் நேரடியாக ஆதரவைத் தெரிவித்துள்ளது. புளொட் வழமையைப் போல நிலைமையைப் பார்த்து முடிவெடுப்போம் என்று மதிலின் மேலே குந்தியிருக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ் இன்னும் வாயைத் திறக்கவே இல்லை. புதிய கூட்டமைப்பில் பங்காளிகள் அல்லவா!

பதிலாக தமிழரசுக் கட்சி பகிரங்கமாகவே தனது எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது. இதற்குக் காரணம், இந்த அணிக்கு தமிழரசுக் கட்சி எதிராக நிற்பதாகும்.

எந்த வகையிலும் இந்தத் திட்டத்தை அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதித்தால் அது சிங்களக் குடியேற்றத்தை வவுனியா வடக்கில் கொண்டு வந்து சேர்த்து விடும். கரும்புச் செய்கைக்கான நீர் விநியோகம் என்ற பேரில் மகா வலி கங்கையை நெடுங்கேணிக்குக் கொண்டு வருவார்கள். நீரோடு சேர்ந்து சிங்கள பௌத்தக் குடியேற்றம் என்ற நெருப்பும் வரும் என்று சொல்கிறார் சுமந்திரன்.

சுமந்திரன் இப்படிக் காட்டமாகச் சொல்வதற்குக் காரணம், உண்மையில் சிங்களக் குடியேற்றம் வந்து விடும் என்பதோ, மகாவலிகங்கை நெடுங்கேணிக்குள் நுழைந்து விடும் என்பதோ அல்ல.

ரெலோ இந்தத் திட்டத்தில் முன்னிலைப் பாத்திரம் ஏற்றிருப்பதேயாகும். மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பைப் பலவீனப்படுத்தி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் ரெலோ காட்டிய அக்கறையும் அதைச் செயற்படுத்தி முடித்ததுமாகும். அத்துடன் இந்தத் திட்டத்தில் முக்கிய பாத்திரமேற்றிருக்கும் ரெலோவின் இன்றைய ஆலோசகர் சுரேன் குருசாமி இதில் பிரதான செல்வாக்கைச் செலுத்துகிறார். இவரே கூட்டமைப்பிலிருந்து ஏனைய மூன்று கட்சிகளையும் பிரித்தெடுத்து, புதிய அணியில் சேர்ப்பதற்கு காரணமானவர்களில் ஒருவர் என்று தமிழரசுக் கட்சியினர் நம்புவதாகும் என்று ரெலோவின் தரப்பில் சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக சுரேன் குருசாமியிடம் கேட்ட போது, இந்தத் திட்டத்தை தொடக்கத்திலிருந்தே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்த அத்தனை பேரும் ஆதரித்தனர். சம்மந்தன் பொதுவெளியிலேயே இதைப்பற்றிப் பேசியிருக்கிறார். ஊடகவியலாளர் சந்திப்பைக் கூட நடத்தியிருக்கிறார். (இதோ அதற்கான ஆதாரங்கள் என்று அந்தச் செய்த வந்திருந்த பத்திரிகை நறுக்குகளைக் காண்பிக்கிறார்). அப்படியெல்லாம் செய்து விட்டு, இப்பொழுதுது ரெலோ தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இது ஒரு தேவையில்லாப் பிரச்சினை என்று சொல்வது அர்த்தமற்றது மட்டுமல்ல, அரசியல் லாபங்கருதியதுமாகும் என்றார்.

மேலும் அவர் சொன்னார், இது எமது பிரதேசத்துக்கு வந்துள்ள மிகப் பெரிய முதலீடாகும். பலரும் கருதுவதைப் போல இது சீன அரசாங்கத்தின் முதலீடல்ல. அல்லது இந்திய அரசாங்கத்துக்கு எதிரானதும் அல்ல. இது தாய்வானின் முதலீடு. இதன் மூலம் வன்னிப் பிரதேசத்தில் பலருக்கான தொழில்வாய்ப்புகளை உருவாக்க முடியும். கரும்பு ஆலையை மட்டுமே குறித்த நிறுவனம் 400 ஏக்கர் நிலத்தில் அமைத்துக் கொள்ளும். ஏனைய நிலமும் அவற்றில் பயிரிடும் உரிமையும் விவசாயிகளுக்கானது. சிலர் சொல்வதைப் போல இந்தத் திட்டத்தினால் சிங்களக் குடியேற்றம் வந்து விடும். நீர்த் தேவைக்காக மகாவலி கங்கையை வவுனியாவுக்குத் திருப்பி, அதன் வழியே சிங்களவர்களைக் கொண்டு வந்து விடுவார்கள் என்பதெல்லாம் ஏற்கக் கூடிய காரணங்களில்லை.

சிங்களவர்களின் பிரசன்னத்துக்கான வழிகள் பல உண்டு. அதைத் தடுப்பது வேறு. இது வேறு. தவிர, இந்தத் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வது பிரதேச மட்டத்திலான மக்கள் பிரதிநிதிகளே. ஆகவே அதனை நாம் (தமிழ்ப்பிரதிநிதிகளே) செய்யப் போகிறோம். அப்படியிருக்கும் போது எப்படி சிங்களக் குடியேற்றத்துக்கான சந்தர்ப்பம் ஏற்படும்? இந்தப் பயனாளிகள் தெரிவில் மாற்றுத் திறனாளிகள் முன்னாள் போராளிகள், பிரதேச ரீதியாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் முன்னணி விவசாயிகள், புதிய செய்கையாளர்கள் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். அதேவேளை ஏற்கனவே நெற்செய்கை உள்ளிட்ட ஏனைய பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு எந்த வகையான பாதிப்பும் ஏற்படாதவாறே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இதில் திருத்தங்களுக்கு இடமுண்டு. அதற்குள் ஏன் இந்த அவசரமும் அநாவசியமான கதைகளும்? நாம் அரசியல் விடுதலையுடன் எமது மக்களின், எமது பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றியும் சிந்திக்கிறோம் என்று.

கரும்புச் செய்கைக்கு அதிகளவு நீர் தேவைப்படுமே. அந்த நீரை செய்கை மேற் கொள்ளப்படக் கூடிய இடங்கள் என்று கூறப்படும் நெடுங்கேணி, செட்டிகுளம் போன்ற இடங்களில் பெற முடியுமா? என்று கேட்டபோது, இது தொடர்பான கள ஆய்வொன்று 2016, 2017 காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. வவுனியாப் பிரதேசத்தில் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியில் பெருமளவு பகுதி வீணடிக்கப்படுகிறது. அதை உரிய முறையில் சேமித்தால் பல திட்டங்களுக்கு அந்த நீரைப் பயன்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டது. இதற்கான கட்டுமானங்கள், வடிகாலமைப்புகளைச் செய்தால் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டும். பொருளாதார வளத்தையும் பெருக்க முடியும் என்று அந்த அறிக்கை சொல்கிறது என்கிறார் சுரேன் குருசாமி.

ஆனால், இந்தத் திட்டத்தை எதிர்க்கின்ற இன்னொரு தரப்பான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் சூழலியலாளருமான பொ. ஐங்கரநேசன், இது தொடர்பாக வேறு விளக்கத்தை அளிக்கிறார். இந்தத் திட்டத்தை நாம் மறுப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, இந்தத் திட்டத்தை வவுனியாவில் திணிக்க முற்படுகின்ற அரசாங்கம், 1960 களிலிருந்து கந்தளாயில் மேற்கொள்ளப்பட்டு வந்த கரும்புச் செய்கையையும் சர்க்கரை உற்பத்தியையும் நிறுத்தி வைத்திருப்பது ஏன்? அங்கேயே மீளவும் அதை ஆரம்பிக்கலாமே. அதற்குரிய அத்தனை வசதிகளும் ஏற்பாடுகளும் அங்கேயே உண்டு.

இரண்டாவது, இந்தத் திட்டத்தினால் நீர்ப் பிரச்சினையும் சூழலியல் கேடும் ஏற்படும். உலக அளவில் நீர்ப்பிரச்சினையையும் சூழலியல் பாதுகாப்பையும் பற்றிச் சிந்திக்கின்ற நாடுகள், தமது முதலீடுகளை இலங்கை போன்ற நாடுகளில் மேற்கொள்ளவே முயற்சிக்கின்றன. இதன் மூலம் வருவாயைத் தாம் பெற்றுக் கொள்வதோடு, தமது இயற்கை வளத்தையும் சூழலையும் பேணிக் கொள்கின்றன. மாறாக எமது வளத்தைச் சுரண்டி, எமது சூ ழலைக் கெடுக்கின்றன. ஆகவே இதற்கு நாம் அனுமதிக்க முடியாது.

மூன்றாவது, இந்தத் திட்டத்திற்குப் பதிலாக எமக்குப் பொருத்தமான வேறு திட்டங்களைக் கொண்டு வர முடியும். உதாரணமாக ஆனையிறவு குறிஞ்சாத் தீவு உப்பளங்களை முந்திய மாதிரி முழுமையான அளவில் இயங்க வைக்கலாம். ஆழ்கடல் மீன்பிடியை விருத்தி செய்துவெளிநாடுகளுக்கான கடல் உணவு ஏற்றுமதியை ஆரம்பிக்கலாம். இந்த மாதிரிப் பலவற்றைச் செய்யலாம். அப்படிச் செய்யாமல் இதைத் திணிக்க முற்படுவது ஏன்? என்று கேட்கிறார்.

இந்தத் திட்டத்தை முன்னாள் முதலமைச்சராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரனும் எதிர்க்கிறார். இது பற்றி விவசாயத்துறை மற்றும் மண்ணியல் ஆய்வுத் துறைசார்ந்த அறிஞர்களிடம் கேட்டபோது, இது அரசியல் விவகாரமாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நாம் நிதானமாக, ஆழமாகப் பார்க்க வேண்டும். எந்தப் பொருளாதாரத் திட்டத்திலும் சாதக பாதக அம்சங்கள் இருக்கும். அதை எப்படிக் கையாளப் போகிறோம் என்பதைப் பொறுத்தே அவற்றின் நன்மை தீமைகளும் வெற்றி தோல்விகளும் உள்ளன. எங்களுடைய விவசாயிகளில் பலரும் சோம்பல் பயிற்செய்கையிலேயே அதிகமாக நாட்டம் கொண்டிருக்கின்றனர். அதற்காகவே அவர்கள் நெல் விவசாயத்தை அதிகமாகச் செய்ய விரும்புகிறார்கள். ஆனால், செய்கை பண்ணப்படும் நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் அவதிப்படுவதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். (20ம் பக்கம் பார்க்க)

# ஏன் இந்தியா?

தமிழ் கட்சிகள் ஏட்டிக்கு போட்டியாக இந்திய பிரதமருக்கு கடிதங்களை அனுப்பியிருக்கின்றன. இந்த அணுகு முறையில் நிதானமான போக்கும் காணப்படுகின்றது. அதே போன்று, தெளிவற்ற அணுகுமுறையும் காணப் படுகின்றது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தெளிவான பார்வை காணப்படுகின்றது. இந்தக் கூட்டில் இருப்பர்கள் அனைவருமே முன்னாள் ஆயுத இயக்கப் பின்புலம் கொண்ட வர்கள். ஒப்பீட்டடிப்படையில் மேற்குல குடன் தொடர்பற்றவர்கள். அவர்கள் இந்தியாவிடம் எதைக் கேட்க வேண் டுமோ அதைக் கோரியிருக்கின்றனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப் படையிலான, 13வது திருத்தச் சட்ட த்தை முழுமையாக அமுல்படுத்துவத ற்கான இந்திய தலையீட்டையே, அவர் கள் கோருகின்றனர். அவர்களது கடிதம் அந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது. அதற்காக தமிழர் தரப்பிலிருந்து நீண்டகாலமாக கோரப்படும் சமஸ்டித் தீர்வை அவர் கள் நிராகரிக்கவில்லை ஆனால் முன் னோக்கிச் செல்லுவதற்கான ஒரு ஏற்பாடாக, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருகின்றனர். தர்க்கரீதியில் இது சரியானது.

அடுத்த நிலைப்பாடு சிக்கலானது. புத்திசாலித்தனமற்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இந்தியா சமஸ்டித் தீர்வை வலி யுறுத்த வேண்டுமென்று கோரியிருக்கி ன்றது. இலங்கை தமிழரசு கட்சியின் அணுனுமுறையிலும் இவ்வாறான போக்கே தெரிகின்றது.

கஜேந்திரகுமார் அவ்வாறானதொரு கடிதத்தை எழுதியிருப்பதால், அதற்கு சமதையான நிலைப்பாட்டைத் தான், தாங்களும் எடுக்க வேண்டுமென்று சம்பந்தன் கருதியிருக்கலாம். தமிழர் களின் கோரிக்கையென்று ஒன்றை முன் வைக்கலாம். அதில் தவறில்லை. ஆனால், இந்தியாவிடம் ஒரு கோரிக் கையை முன் வைக்கின்ற போது, இந்தியாவை புரிந்து கொண்டு, அதற் கேற்பவே அணுக வேண்டும். எங்க ளது விருப்பங்களை கூறுவது கோரி க்கையல்ல. கோரிக்கைகளை முன் வைக்கும் போது, அதில் தந்திரோபா யம் இருக்க வேண்டும். அதே வேளை, இந்தியாவினாலும் நிராகரிக்க முடியாத விடயமாக இருக்க வேண் டும். ஏனெனில், நாங்கள் பிறிதொரு நாட்டிடமே கோரிக்கையை முன்வைக் கின்றோம். இந்த இடத்தில்தான் இந்தியா எங்களுக்கு ஏன் தேவை யென்னும் கேள்வி எழுகின்றது?

இதனை இரண்டு நிலையில் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று, இலங்கை அரசியல் நிலையிலிருந்து நோக்கு வது. இரண்டாவது, சர்வதேச அரசி யல் பின்புலத்திலிருந்து நோக்குவது.

முதலில் இலங்கை அரசியலை புரிந்து கொள்வோம். இலங்கைத் தீவின் அரசியலென்பது சிங்கள மேலாதிக்க அரசியலாகும். தென்னிலங்கை மைய அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களு டன் பகிர்ந்து கொள்ள, சிங்கள அரசி யல் சமூகம் தயாராக இல்லை. இன்று வரையில் இந்த நிலைமை தொடர் கின்றது. இந்த இடத்தில் தான், இந்தியாவின் தலையீடு தேவைப்படு கின்றது. இலங்கை அரசாங்கம் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க மறுத்து வரும் நிலையில் தான், இந்தியாவின் அழுத்தங்கள் தமிழ் மக்களுக்கு தேவைப்படுகின்றது. இந்தியா எவ்வா றான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்? எந்த அடிப்படையில் பிரயோ கிக் முடியும்?



இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியான தலையீட்டைச் செய்த கால த்திலிருந்து ஒரு கொள்கை நிலைப் பாட்டைக் கொண்டிருக்கின்றது. அதாவது, இலங்கையை துண்டாட அனுமதிப்பதில்லை. அடுத்தது, தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கில் மாகாண அரசியல் நிர்வாக முறையின் கீழ் அதிகாரப்பகிர்வு. இந்த இரண்டு அடிப் படைகளிலிருந்து தான், இலங்கையின் உள் விவகாரத்தை இந்தியா அணுகி வருகின்றது. 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் இந்த கொள்கையின் அடிப் படையில் தான் உருவானது. இதன் பின்னர் எதிர்பாராத திருப்பங்கள் சில அரசியலில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவிற்கு எதிராக திரும்பியது. இந்தியாவை இலங்கையிலிருந்து வெளியேற்று வதை ஒரேயொரு இலக்காகக் கொண்டே விடுதலைப் புலிகள் செயற்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தை தந்திரத்தோடு கணித்துக் கொண்ட, பிரேமதாச விடுதலைப் புலிகளை அரவணைத்து, இந்தியாவை வெளி யேற்றும் திட்டத்தை வகுத்தார். அவரது எதிர்பார்ப்பு இறுதியில் நிறை வேறியது.



இதன் பின்னர் இலங்கையின் அரசியல் விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையீடு செய்யவில்லை. உண்மை யில் இந்தியா இந்த விடயத்தில் அவமானகரமாகவே வெளியேற நேர்ந் தது. எந்த மக்களுக்கு இந்தியா உதவ முன் வந்ததோ, எந்த மக்கள் மீது பரிவுணர்வு கொண்டிருந்ததோ, எந்த இயக்கத்திற்கு பயிற்சியும், ஆயுதமும், உணவும் வழங்கியதோ, அவர்களே இறுதியில், இந்தியாவை அன்னிய சக்தியென்று கூறி, வெளியேறுமாறு கூறினர்.

அவ்வாறு கூறிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவ ஆசிரியர், அன் ரன் பாலசிங்கம், பின்னர், இந்தியா எங்களுக்கு தேவையென்று கூறினார். 2000ஆம் ஆண்டு, இந்திய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய நேர் காணலில் இதனை குறிப்பிட்டார். 2006இல், மன்னிப்பு கோருவதன் மூலம் பழைய கசப்புணர்வை மாற்றியமைக்க வும் முயற்சித்தார். ஆனால் அப்போது, காலம் அதிகம் கடந்திருந்தது.

இன்று யுத்தம் நிறைவுற்று 14 வரு டங்களாகி விட்டது. இந்த 14 வருட ங்களில், ஏராளமான விடயங்கள் பேசப் பட்டிருக்கின்றன. ஆனால் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு அங்குலம் கூட முன்னோக்கி நகர முடியவில்லை. இந்த நிலையில்தான், இந்தியாவினால் தலையீடு செய்யக் கூடிய விடய மொன்றில், இந்தியாவை தலையீடு செய்யுமாறு கோர வேண்டிய தேவை யேற்பட்டிருக்கின்றது.

இந்தியா தலையீடு செய்யக் கூடிய, அதன் ஆலோசனைகளை பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரேயொரு விடயம், 13வது திருத்தச்சட்டம் மட்டும் தான். இலங்கைக்கு விஜயம் செய்த, இந்திய பிரதமர் மோடி, கூட்டுறவு சமஸ்டி முறைமையின் மீதான தனது ஈடு பாட்டை தெரிவித்திருந்தார். அதனை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு, இந்தியாவிடம் சமஸ்டியை வலியுறு த்தலாமென்று எண்ணுவது தவறு. ஏனெனில் இந்தியாவின் அறிவிக்கப் பட்ட நிலைப்பாடாக 13வது திரு த்தச் சட்டமே இருக்கின்றது. அதி லிருந்து ஒரு கூட்டுறவு சமஸ்டியை நோக்கிச் செல்ல முடியுமென்றால், அது சிறப்பானது. அதற்கு நாங்கள் முயற்சிக்கலாம் ஆனால் அதனை இந்தியா தட்டில் வைத்து தரவேண்டு மென்று வாதிடுவதும், அதற்காக தற்போதிருப்பதை உச்ச பட்சமாக பயன்படுத்திக் கொள்ள மறுப்பதும் தான் தவறானது.

இப்போது சர்வதேச அரசியல் பின் புலத்தில், இந்தியாவின் தேவையை நோக்குவோம். இன்றைய உலக அரசி யல் சூழல் முற்றிலும் மாறி விட்டது. அன்று எதிரணிகளில் இருந்த இந்தியாவும் அமெரிக்காவும் இப்போது ஓரணியில் இருக்கின்றன. அன்று, அமெரிக்காவுடன் இணைந்திருந்த சீனா, இன்று அமெரிக்காவிற்கு எதிர் நிலையிருக்கின்றது. இவ்வாறான தொரு சூழலில் பிராந்தியத்தில் சக்தி மிக்க நாடுகளாக இருப்பவற்றின் முக்கியத்துவம் முன்னர் எப்போது மில்லாதளவிற்கு அதிகரித்து விட்டது. ரஸ்ய உக்ரெயின் யுத்தத்தின் போது, இந்தியாவின் அணுகுமுறை இதற்கு சிறந்த உதாரணம். உக்ரெயினுக்கு பக்கபலமாக மேற்குலகம் நிற்கின்றது.

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யதீந்திரா -



அமெரிக்கா தொடர்ந்தும் உக்ரெயினு க்கு உதவி வருகின்றது. ஆனால் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை கொண்டிருக்கின்ற இந்தியா, இந்த யுத்தத்திலிருந்து தன்னை அதிகம் விலத்தி வைத்திருக்கின்றது. அமெரிக்கா ரஸ்யாவின் மீது பொரு ளாதார தடையை விதித்திருக்கின்றது. ஆனால் இந்தியாவோ, சுதந்திரமாக ரஸ்யாவுடன் வியாபாரம் செய்கின்றது. இது எவ்வாறு நிகழ்கின்றது?

ஏனெனில், உலகம் அதிகம் பிராந்திய மயப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் முன்னர் அவ்வாறில்லை. இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்த காலத்தில், அது சோவியத் யூனியனுடன் நட்பிலிருந் தது. சோவியத் யூனியனுடனான பாது காப்பு உடன்பாட்டை ஒரு கவசமாகக் கொண்டுதான், இந்திராகாந்தி, தெற் காசிய அரசியலில் சுயாதீனமாக இயங்கினார்.

கிழக்கு காக்கிஸ்தானை உடைப்பதற் கான இந்திய நகர்வின் போது, அமெரிக்காவின் தலையீட்டை தடுக் கும் நோக்கிலேயே, சோவியத் யூனிய னுடன், இந்தியா அவ்வாறானதொரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. இன்றைய அரசியல் சூழல் தலை கீழாகி விட்டது. சோவியத் யூனியனின் செல்வாக்கு வளையத்திற்குள் இருந்த காலத்திலேயே, இந்தியாவை மீறி, செயற்படாத, அமெரிக்கா எவ்வாறு இப்போது செயற்படும். அமெரிக்கா வின் அசைவின்றி, மேற்குலகின் தலையீட்டில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது. இவ்வாறானதொரு சூழ லில், இந்தியாவை தவிர்த்து, ஈழத் தமிழர்கள் அரசியல் தீர்விற்கான அழுத் தங்களை எதிர்பார்க்கலாமா?

எனவே இலங்கையின் அரசியல் பின்புலத்தில் நோக்கினாலும், இந்தியா எங்களுக்குத் தேவை. சர்வதேச அரசியல் பின்புலத்தில் நோக்கினாலும் இந்தியா எங்களுக்குத் தேவை. இந்தியாவின் காத்திரமான தலை யீடின்றி, ஈழத் தமிழர் அரசியலில் எவ் வித முன்னேற்றமும் ஏற்படுவதற்கான வாய்ப்பு எப்போதுமே, ஏற்படப் போவ தில்லை. இந்த விடயங்களை சரியாக புரிந்து கொண்டால், இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டியதன் அவசி யத்தை புரிந்து கொள்வதில் சிரமமிரு க்காது.

இந்தியாவிடம் செல்லாமல் வேறு எங்கு சென்றும் பயனில்லை. இந்தியாவை தவிர்த்து இதுவரையில் முன்னெடுக் கப்பட்ட எந்தவொரு அரசியல் தீர்வு முயற்சியும் இதுவரையில் வெற்றி பெறவில்லை. இதனை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியம்.

# நோக்கப்படாத கோணங்கள்!

இரா.சம்பந்தன்



இன்றைக்கு எங்களுடைய கல்யாண நாள் மாமா நான் ஒருக்கா கோவிலுக்குப் போட்டு வாறன் பிள்ளை படுத்திருக்கிறாள் எழும்பினால் இந்தப் பாலைக் குடுங்கோ என்ன? ஓடியாறன்.

ஞாயிற்றுக்கிழமை பொழுது விடிந்ததும் விடியாததுமாக குளியல் அறையில் கேட்ட தண்ணீர் சத்தத்துக்கும் சமையல் அறையில் இருந்து வந்த தாளித்த மணத்துக்கும் விடை தெரியாமல் படுக்கையில் கிடந்து தவித்த ஓவிசியர் தணிகாசலம் மருமகள் சியானியை நிமிர்ந்து பார்த்தார்.

தினமும் இறுக்கமான ஜீன்சும் ரீசேட்டும் என்று பரபரப்பாக இருப்பவள் இன்று பட்டுப் புடவையில் மட்டுமல்ல ஒருவித வெட்கமும் கலந்த தொனியில் சொல்லி விட்டுத் திரும்பினாள்.

இந்தா பிள்ளை கொஞ்சம் நில்லு! என்ற ஓவிசியர் சட்டைப் பையிலிருந்து நூறு டொலர் காசை எடுத்து நீட்டினார்.

வேண்டாம்! இது என்னத்துக்கு மாமா!

இல்லைப் பிள்ளை நல்ல நாள் அதுவுமாய் வேண்டாம் என்று சொல்லாதே பிடி. கவனமாக போட்டு வா! எல்லா இடமும் வழுக்குது.

இவர் போன் பண்ணினால் கோவிலுக்கு போட்டேன் என்று சொல்லுங்கோ மாமா.

ஓவிசியர் சியானி போவதையே பார்த்துக் கொண்டு நின்றார்.

மூன்று வயதில் குழந்தை இருந்தாலும் அவள் இன்றும் அழகாய்த் தான் இருந்தாள். விரித்து விட்ட தலையிலிருந்து மழை பெய்து முடிந்ததும் தாழ்வாரத்துக் கிடுகிலிருந்து சொட்டு விழுவது போல முத்துக்கட்டி உருளும் தண்ணீர் அவளின் பின்புறத்து சேலையை இடுப்பு வரை நனைத்திருந்தது.

ஓவிசியர் நேற்று உம்முடைய மருமகளைப் பார்த்தேன். சும்மா சொல்லக் கூடாது கடவுள் யாருக்கோ சவால் விட்டுப் படைச்சது போல என்ன வடிவாகப் படைச்சிருக்கிறார். வடிவு மட்டுமே கதையும் அப்படித் தான். என்ன பண்பான வார்த்தைகள் பேசுது அந்தப் பிள்ளை. எங்களின்ரை வீடுகளிலும் இருக்குதுகள். தகரத்திலே ஆணியாலே கீறின மாதிரிக் கத்திக் கொண்டு! எல்லாவற்றுக்கும் ஒரு கொடுப்பனவு வேணும்.

மாலை வேளையில் மோலில் கூடும் வயோதிப நண்பர்கள் புகழ்ந்து சொல்லும் போது ஏற்படும் மகிழ்ச்சியை மிசிசாகாவில் இருந்து அவரின் மனைவி பாக்கியம் எடுக்கும் போன் கோல் தவிடுபொடியாக்கி விடும்.

பாக்கியத்துக்கு சியானியைப் பிடிக்காது. கனடாவுக்கு வந்த புதிதில் அவருக்கும் தான் அவளைப் பிடிக்காமல் இருந்தது. ஆனால் என்றைக்கு அவள் யாருக்கும் பயப்படாமல் அந்தக் கருத்தைச் சொன்னாளோ அன்றிலிருந்து அவர் மனதில் அவள் இடம் பிடித்து விட்டாள். ஒரு தரும நியாயம் உணர்ந்த பிள்ளை அவள் என்ற எண்ணமே அவர் மனதெங்கும் வியாபித்து இருந்தது.

இங்கே பாருங்கோ எனக்கு குழந்தையை பார்க்க உதவி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மாமி மகளோடை மிசிசாகாவிலும், மாமா மகனோடை ஸ்காபரோவில் என்னுடைய வீட்டிலும் இருக்க ஒருக்காலும் நான் சம்மதிக்க மாட்டன். அது பெரிய பாவம். வயது போன நேரத்திலே அவையை இப்படிப் பிரிச்சு வைக்கிறது அதுகளின்ரை மனதை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று அண்ணனும். தங்கச்சியும் யோசிச்சுப் பார்த்தியளோ?

ஏதோ சொத்துப் பிரிக்கிறது போல கதைக்கிறியள். அவையை எங்காவது ஒரு இடத்திலே ஒன்றாக இருக்க விடுங்கோ பாப்பம்!

மருமகளின் கோபத்தை அன்று தான் பார்த்தார் ஓவிசியர். பெற்ற பிள்ளைகள் சுயநலத்துக்காக இரக்கம் இல்லாமல் செய்ய நினைக்கும் ஒரு கொடுமைக்கு எதிராக எங்கிருந்தோ வந்த ஒருத்தி குரல் கொடுக்கிறாளே என்று அவர் மனதார சந்தோசப்பட்ட போது தான் மருமகள் பரிதாபமாகத் தோற்றுப் போனாள்.

சியானி தோற்றுத்தான் போனாள். அவள் வென்றிருப்பாள் என்று ஓவிசியருக்குத் தெரியும். ஆனால் அணுகுண்டு விழுந்த பின்பு உலக யுத்தமும் தான் முடிஞ்சு போச்சே. ஏன் வீரம் குறைந்து போகா விட்டாலும் விவேகம் குறைந்தவர்களோடு போராடி என்ன பயன்? என்ற நினைப்பில் தானே அது முடிந்து போயிற்று.

என்ன நீர் அப்பாவைக் கலைச்சு விட்டால் விரும்பின ஆட்களைக் கொண்டு வந்து வைத்துக் கதைச்சுக் கூத்தடிக்கலாம் என்று நினைக்கிறீரா? அப்பா இங்கே தான் இருப்பார். சரியோ அம்மா தங்கச்சியோடை போய் இருக்கட்டும். நீர் வாயை மூடிக்கொண்டு இரும்.

தன்னுடைய மகன் யாரை மனதில் வைத்துக் கொண்டு அப்படிச் சொன்னான் என்று அவருக்குத் தெரியும். மனைவி பாக்கியம் மகனும் மருமகளும் வேலைக்குப் போன பின்பு போன் எடுத்து காதிலே பட்டை தீட்டித் தரும் விசயந்தான் அது.

தம்பியைக் கண்டால் முகம் உம்மென்று இருக்கும். அவன் நேத்தன் வர வேணும் அவவின்ரை சிரிப்பென்ன. நெளிப்பென்ன எங்கை தேடிப் பிடிச்சியளோ தெரியாது இப்படியொரு தேவடியாளை. செடியில் பிறந்து கொடியில் விழுந்த கதை மாதிரிப் போட்டுது என்னுடைய பிள்ளையின்ரை வாழ்க்கை. என்ன செய்வம். என்னப்பா ஏதாவது சமைச்சுப் போடுறாளோ இல்லாட்டில் என்ரை பிள்ளையைப் பட்டினி போடுறாளோ? பெடியன் நல்லாக மெலிஞ்சு கொண்டு போகுது.

இல்லையப்பா இவன் தம்பியும் நேத்தன்ரை சிநேகிதத்தை வேலை செய்யுற இடத்தோடை வைச்சிருக்க வேணும்.

ஓவிசியர் பல தடவை பாக்கியத்துக்குச் சொல்ல நினைத்துப் போட்டும் சொல்லவில்லை. பாக்கியம் அப்படியில்லை. எப்ப போன் எடுத்தாலும் இதே பல்லவி தான் பாடும். ஆனால் இன்றைக்கும் கோவிலுக்கு போக முன்பு சியானி சமைத்து வைத்து விட்டுத்தான் போயிருக்கிறாள்.

இத்தனைக்கும் அவள் வருமான வரித் துறையில் பெரிய வேலையில் இருக்கிறாள். நினைத்தால் பவிசு காட்ட அவளுக்கும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் அப்படி எந்தப் பந்தாவும் இல்லாமல் வேலையால் வந்தவுடனே என்ன மாமா சாப்பிட்டியள்? இவர் போன் அடிச்சவரோ என்று தான் முதலில் கேட்பாள்.

அப்படிக் கேட்காமல் போனால் கூட யாரும் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனாலும் அவள் கேட்பாள். விழுந்தடித்துச் சமைப்பாள். தான் சாப்பிடும் போது சாப்பிட அழைப்பாள். எங்கு போவதானாலும் ஒரு வார்த்தை சொல்லி விட்டுத்தான் போவாள். இது கனடாவில் பல மாமன்களுக்குக் கிடைக்காத வரம்.

இந்த உண்மையெல்லாம் பாக்கியத்திடம் எடுபடாது. உதெல்லாம் அவளின்ரை நடிப்பு என்று ஒரு வரியில் பாக்கியம் தீர்ப்புச் சொல்லிவிடும்.

ஓவிசியர் திரும்பவும் கட்டிலில் சாய்ந்தார். அவர் மனைவியோடும் எதிர்த்து வாதிடுவதில்லை. ஒருவேளை பாக்கியம் சொல்வது தான் உண்மை என்ற நிலை வந்தால் என்ன செய்வது என்ற பயம் அவருக்குத் தலை தூக்கும் விதத்திலும் சியானியின் நடத்தைகள் சில சமயங்களில் அமைந்து விடுவதுண்டு.

அன்றும் அப்படித்தான் நடந்து விட்டது. உறவினர்கள் வீட்டுப் பிறந்த நாள். மகன் குடும்பத்தோடு அவரும் மகளோடு பாக்கியமும் என்று கன்னை பிரிந்து வந்து கூடிக்கொண்ட இடம். நேத்தனையும் அங்கு கண்டவுடன் ஓவிசியர் கலங்கித்தான் போனார்.



எப்பவும் அவன் இருக்கும் இடம் சித்திரை மாதத்துப் பனங்கூடல் மாதிரி சலசலப்பாகத் தான் இருக்கும். ஏதாவது ஒரு விசயத்தைப் பற்றி விவாதித்து எப்போதும் கத்திக் கதைப்பது அவனது பழக்கம். அவனோடு சியானியும் சேர்ந்து விட்டால் சனங்களுக்கு சிரிச்சு வயித்து நோ வந்துவிடும்.

ஐயோ இந்தப் பெடியும் வந்திருக்கே. இவள் பிள்ளை சியானி கணவன், மாமன், மாமி என்று எல்லோரும் இருக்கிற இடத்திலே கவனமாக இருந்து விட வேணும் மனம் பதைத்தது. ஆனால் எல்லாமே அவர் விருப்பத்துக்கு மாறாகத்தான் நடந்தது.

சியானியைக் கண்டவுடன் எல்லாரும் பொறுங்கோ. இங்கே சியானி வந்திட்டுது. சியானி எங்கே நீர் சொல்லும் உலகத்திலே ஆண்களா, பெண்களா தைரிய சாலிகள்? நேத்தன் கேட்டான். ஓவிசியர் தலை குனிந்து இருந்தார்.

உலகத்திலே யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் உம்மை விட நான் மனதாலும் பலசாலி தான். உடலாலும் பலசாலி தான்.

அப்படிச் சொல்லும் சியானி என்று ஒரு கூட்டம் சத்தம் போட நேத்தனும் விடவில்லை. சிம்ரன் மாதிரி இருந்து கொண்டு எப்படி நீர் சொல்லுவீர் என்னை விட நீர் பலசாலி என்று சியானி? கேட்டுக் கொண்டே கிட்ட வந்தான்.

அவன் வந்ததும் ஓவிசியர் கனவிலும் நினைக்காத ஒன்றைச் சொன்னாள் சியானி. நேத்தன் உம்மை விட நான் பலசாலி என்று வாயாலே சொல்லி உமக்கு விளங்கப்படுத்த ஏலாது. இந்த மேசைக்கு கையைக் கொண்டு வாரும். காட்டுறன்.

ஒரு பொம்பிளை இப்படிச் சொன்ன பிறகு இருந்து என்னத்துக்கு அதையும் ஒருக்கால் பார்ப்போமே. வாரும் நேத்தன் வந்து விட்டான்.

சுற்றி நின்று எல்லோரும் வேடிக்கை பார்க்க குனிந்து சாப்பாட்டு மேசையில் முழங்கையை ஊன்றி இருவரும் பலம் பார்த்தார்கள். ஒரு கட்டத்தில் பஞ்சாபி உடையின் மேல் போர்வை விழுந்ததைக் கூட பொருட்படுத்தாமல் நேத்தனுடன் போராடி சியானி வென்றுவிட்டாள்.

எல்லாரும் கைதட்டி ஆரவாரம் செய்ய ஓவிசியர் மனம் மட்டும் நாய்ப் பிறவி என்றது. ஆனால் சியானியோ மௌனமாக சிரித்து விட்டுப் போய் கணவனின் அருகே அமர்ந்து விட்டாள்.

ஓவிசியர் பாக்கியத்தை பார்த்தார். அவள் கோவத்தில் சிவந்து போயிருந்தாள்.

பத்துப் பேருக்கு முன்னாலே ஒரு இளந்தாரிப் பொடியன்ரை கையைப் பிடித்து வளைக்கிறாள். நெஞ்சுச் சட்டைக்குள்ளாலே எல்லாம் தெரியுது. ஒரு வெட்கம் வேண்டாம். என்னுடைய பிள்ளையாய் இருக்க வேணும் கொள்ளிக் கட்டை எடுத்துச் சுடு போட்டிருப்பன். களிசறைப் பழக்கம். அப்பாவும் மகனும் பார்த்துச் சிரிச்சுப் போட்டு வாறியள் என்ன?

சரி சரி பத்துப் பேருக்கு முன்னாலே தானே அப்படிச் செய்தாள். தனியச் செய்யல்லே தானே. இவன் தம்பி இருந்தவன் அவன் பெரிசு படுத்தல்லே. நீ ஏன் துள்ளி விழுகிறாய்? விடு

அரைமனதுடன் பாக்கியத்தை போனில் சமாதானம் செய்த ஓவிசியர் இது கொஞ்சம் அதிகம் என்று தான் நினைத்தார். அதற்குப் பின்பும் சில நிகழ்வுகள் அவருக்குப் பிடிக்காமல் தான் இருந்தன. மாலை வேளைகளில் நேத்தன் வீட்டுக்கு அடிக்கடி வாறதும், மணிக் கணக்காக சியானி சிரித்துச் சிரித்து பேசுவதும் கூட அவருக்கு உடன்பாடற்ற விடயங்கள் தான்.

அதனால் மாலை வேளைகளில் தான் வெளியே போவதைக் கூட அவர் குறைத்துக் கொண்டு விட்டார். அது பற்றி சியானியோடு பல முறை கதைக்க நினைத்த போதும் சியானி மகளில்லை. மருமகள் கவனமாகப் பேச வேண்டும். கன குடும்பங்களிலே இந்த வித்தியாசம் விளங்கிக் கொள்ளப் படாத படியால் தான் நிறையப் பிரச்சனைகள் என்ற எண்ணம் ஏற்பட்டு அவருக்கு தடை போட்டு விடும்.

போன் மணி ஒலித்தது. பாக்கியம் தான். சொல்லு என்றார். இல்லே தம்பிக்கு இன்றைக்கு கல்யாண நாள். அதுதான் ஒருக்கால் கதைப்பம் என்று எடுத்தனான். நிக்குதே.

அவன் விடிய வேலைக்குப் போட்டான். சியானியும் கோவிலுக்குப் போட்டுது. கொஞ்சம் செல்ல எடு.

ஏனாம் கோவிலுக்கு? நேத்தன் சட்டை இல்லாமல் பஜனை பாடுறதை இரசிக்க போறாவாமோ??

உன்னோடை கதைக்கேலாதப்பா போனை வை.

போனை வைத்து விட்டுத் திரும்பிய ஓவிசியர் குழந்தையை வலுக்கட்டாயமாக எழுப்பிப் பால் கொடுத்தார். உறக்கம் குழம்பியதாலோ என்னவோ அது தொடர்ந்து அழுதது. தூக்கி விளையாட்டுக் காட்டினார். அதற்குள் சியானியும் வந்து விட்டாள்.

அவள் முகம் வியர்த்திருந்தது. (22ம் பக்கம் பார்க்க)

# இந்துத்துவத்தின் அகண்ட பாரத பொம்மலாட்டம்! நூல் பிடிக்கும் புலம்பெயர் சாகச பொம்மைகள்!

இந்திய அரசு ஈழத்தமிழர்களின் தேசியக் கோரிக்கைகள் தொடர்பாக என்ன வகையில் எல்லாம் நடந்து வருகிறது என்பது தொடர்பாக புதிய வியாக்கியானங்கள் தமிழ் மக்களுக்கு அவசியப்படும் நிலை இன்றில்லை. இந்திய அரசு மட்டுமல்ல உலகில் இருக்கும் வலிமை வாய்ந்த அரசுகள் அனைத்தும் தமது தேசத்தின் நலன் சார்ந்து தான் வெளிவிவகார விடயங்களை அணுக வல்லன என்பது சர்வதேச அரசியலின் முதல் அரிச்சுவடி. இந்த உண்மை, ஈழத்தமிழர்கள் பிரச்சனையில் இந்திய அரசின் இதுவரைகால அணுகுமுறை என்பது எமக்கு பட்டறிவாக பதிந்து கிடக்கிறது. அன்று இந்திரா காந்தி தொடக்கம் இன்று மோடி வரை தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் அணுகுமுறைகளைக் கடந்து அரசியல் தலைவர்களின் குணாம்சங்கள் ஈழத்தமிழரின் நல்வாழ்வைத் தீர்மானிக்க வல்லன என்னும் போலி நம்பிக்கைகள் எம்மில் சிலரிடம் இன்றுவரை நீர்த்துப் போனதாகவும் இல்லை. தமிழ்நாட்டு ஆட்சியாளர்களும், பெரும்பாலான அரசியல் தலைவர்களும் தமது சொந்த அரசியல் இலாபத்திற்காக ஈழத்தமிழர் தேசிய உரிமை விடயங்களில் அதீத அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள் என்பதும் ஒரு கசப்பான உண்மையாகும்.

எமது மக்களில் ஒரு பிரிவினரும் மக்கள் பிரதிநிதிகளும் ஏன் போராட்டத் தலைமைகளும் எம்ஜிஆர், கலைஞர் தொடங்கி வைகோ என்று மாறி இன்று சீமான் வரை தொப்புள் கொடி உறவு என்னும் மாயவலையில் சிக்குண்டு நிற்பதை பார்க்கிறோம்.

ஈழத்தமிழர்களை மாத்திரமல்ல இலங்கைத்தீவையே ஏதோ ஒரு வகையில் தமது ஆளுகைக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்னும் கடும் பிரயத்தனத்தில் இருக்கும் இந்திய அரசுடன் உரையாடலும், உறவும் ஈழத்தமிழருக்கு தவிர்க்க முடியாத ஒரு தேவை என்பதை மறுக்க முடியாது. எவ்வாறாயினும் விருப்பு வெறுப்புகள், அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால் தமிழர் தேசம் என்னும் வகையில் இது வெளியுறவு தொடர்பான பிரச்சனை. இந்தச் சமன்பாட்டிற்கு உள்ளே செல்லாத முக்கிய தமிழ் கட்சிகளோ அல்லது முக்கிய போராட்ட இயக்கங்களோ இல்லை என்று தான் கூற வேண்டும்.

இந்த நிலைமை இப்படியிருக்க, இந்திய அரசைக் கையாளுவது, தமிழ்நாட்டு ஆட்சியாளர்களைக் கையாளுவது என்று எமக்குள் இருந்து பல சக்திகள் புறப்பட்டிருக்கின்றன. இந்தக் கையாளுதல் என்னும் ராஜதந்திரம் என்பது புலிகள் உட்பட அனைவரும் இறுதியில் பயன்படுத்தப்பட்டதும், அழிக்கப்பட்டதும் தான் மிஞ்சியிருக்கிறது என்பது நாம் கற்றுக் கொண்ட வரலாற்று பாடம்.

வரலாற்றில் நாம் எவ்வளவு தான் பாடம் கற்றுக் கொண்டாலும், தமிழ்த் தலைமைகள் என்று கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகள் இந்திய அரசுடனான உறவு விடயத்தில் ஒன்று கைத்தடிகளாக இருக்கிறார்கள் அல்லது ராஜதந்திர உறவை மேற்கொள்ள முடியாத கையறு நிலையில் இருக்கிறார்கள். இதற்கு பதிலாக இந்தியா தொடர்பாக பேசுபவர்களையோ அல்லது 13 வது திருத்தச் சட்டம் தொடர்பாக பேசுபவர்களை அரசியல் புனிதமற்றவர்களாக காண்பிக்கும் அரசியல் சந்தர்ப்பவாத வேலையை தமிழ் தேசியத்தின் புனிதர்கள் என்னும் முகாமிற்குள் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு சிலர் செய்து வருகின்றனர்.

இதுவரை காலமும் இந்திய அரசுடனும் இந்திய ஆளும் கட்சிகளுடனும் உறவுகளை கொண்டிருந்த அரசியல் தலைவர்கள், போராட்ட இயக்கங்கள் என்பவற்றை துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள் என்று முத்திரை குத்தி அரசியல் செய்து வந்த பிரிவினரில் சிலர் இன்று தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் இந்திய அரசு சார்பு அல்லது இந்திய அரசு அடிவருடிகள் என்னும் நிலைக்கு சென்றிருக்கின்றனர்.

புலம்பெயர் தமிழர்கள் சிலர் அகண்ட பாரதக் கொள்கை என்பது தமிழரது அரசியலுக்கு வலுச்சேர்க்கும் என்னும் அதிமேதாவித்தனத்துடன் தாயகத்தில் ஜனநாயகப் போராளிகள் என்று அழைத்துக் கொள்ளும் பிரிவையும் அழைத்துக் கொண்டு டெல்லி செங்



கோட்டையை முற்றுகையிட்டு இந்திய அரசின் ஆசி பெற்று வீறாப்புடன் திரும்பியிருந்தனர். சமீபத்தில் தாயகத்திற்கு பயணம் செய்த பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலையை வரவேற்ற சில தமிழ் அரசியல் தலைவர்களும் சில சைவத் தொண்டர்களும் அண்ணாமலையின் இந்துத்துவா நிகழ்ச்சிநிரலுக்கு வலுச்சேர்த்து புகழாரம் சூட்டி அனுப்பி வைத்தனர்.

புலம்பெயர் சூழலில் தமிழ் தேசியத்தின் மிக நெருங்கிய பிரிவாக தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளும் ஒரு பிரிவினர் RSS இன் இந்து மதவெறி, தமிழின் மீதான ஹிந்தி சமஸ்கிருத மொழி ஆதிக்கம், இனங்களின் மீதான அடையாள அழிப்பு, தமிழகத்தின் தன்னாட்சி உரிமை பறிப்பு, மனு தர்மம் என்னும் சாதி ஆதிக்கம் என்னும் கோட்பாடுகளையும், அரசியலையும் தாங்கிச் செல்லும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான அண்ணாமலையை பிரித்தானியாவிற்கு வலிந்து அழைத்து சிறப்பிக்கிறார்கள்.

அண்ணாமலை இந்திய அரசின் பிரதிநிதியாக இங்கு அழைக்கப்படவில்லை அனைவரையும் கையாளுகிறோம், ராஜதந்திரம் செய்கிறோம் என்று அரசியல் கற்றுக்குட்டித்தனம் பண்ணும் புலம்பெயர் பகடைக்காய்கள் இவர்கள்.

தமிழ்நாட்டு மக்களும், தமிழக மக்கள் அமைப்புகளுமே எமது நெருங்கிய உறவுகள். அது மட்டுமல்ல, ஈழத்தமிழருக்காக உண்மையில் பயணிப்பவர்கள். இவர்களுடன் கூடவே இந்திய மண்ணில் தமது உரிமைகளுக்காக போராடுகிற பிரிவுகளும், ஜனநாயக தளத்தில் எமது உரிமைப் போரை அக்கறையுடன் நோக்குபவர்கள் தான் ஈழத்தமிழரின் உண்மையான நண்பர்கள்.

இந்துத்துவா கொள்கையின் உறைவிடமான RSS இன் அரசியல் பிரிவான BJP ஆட்சிக்கு வந்ததில் இருந்து இந்தியாவில் இந்து மதவெறியும், வட மாநிலங்களில் சாதி ஆதிக்க வெறியர்களின் ஆட்டங்களும் பெருமளவில் தாண்டவமாடுவது கண்கூடு.

மொழிவாரி மாநிலங்களாக இருக்கும் ஒன்றிய அரசு மாநில அரசு என்னும் உறவில் மொழிவாரி மாநிலங்களின் இருப்பை அழிக்கும் வகையில் அனைத்து சதி வேலைகளையும் திட்டமிட்டு செய்து வருகிறது இந்த BJP அணி. குறிப்பாக இந்துத்துவா அரசின் எதிர்ப்புக் குரலாக இருக்கும் எமது நெருங்கிய உறவுகளான தமிழ்நாட்டு மக்களின் இன ரீதியான உரிமைகளைப் பறிப்பதிலும், மத முரண்பாடுகளை உக்குவித்து ஒரே இனத்திற்குள் பிளவுகளையும் உருவாக்கி வருகிறது. இந்த வகை நிகழ்ச்சிநிரலை தமிழகத்தில் தலைமேல் கொண்டு பல சதி வேலைகள் மூலம் நிகழ்த்தி வருபவர் தான் இந்த அண்ணாமலை. இவரை பிரித்தானியாவிற்கு அழைத்து மரியாதைப் படுத்தும் ஈழத் தேசத்து போராளிகளாகக் கூறிக்கொள்ளும் சிலர் உண்மையில் செய்வது தான் என்ன? இராஜதந்திரம்.

வால்பிடிப்பது என்னும் வழிமுறைகள் மூலம் ஈழத்தமிழருக்கும் தமிழ்நாட்டுத் தமிழருக்கும் இவர்கள் செய்யும் அரசியல் கடும் பாதகமானது.

புலம்பெயர் சூழலில் இருந்து செய்யப்படும் சர்வேதச சமூகத்தை நோக்கிய அழுத்த வேலைகளும், தாயகத்தில் நடைபெறும் ஒடுக்குமுறைகள், அடையாள அழிப்புகளுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் தாயக மக்களின் இருப்பையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் முகமாக செய்யப்படும் வேலைகள் அனைத்தும் தாயக மக்களுக்கான பயனுள்ள பணிகளாக ஒருபுறம் இருந்து வருகின்றன.

தமிழ் தேசத்திற்கான ஒரு உறுதியான மக்கள் அமைப்பும், அரசியல் தலைமையும் இல்லாத சூழலில் புலம்பெயர் வாழ்வில் இருந்து கொண்டு சிலர் தேசத்திற்கான வியூகம் வகுத்து நாடுகளையும், அரசியல் தலைவர்களையும் கையாளுவதாக நடத்தும் கற்றுக்குட்டித் தனமான அரசியல் நடவடிக்கைகள் மிகுந்த ஆபத்துகள் நிறைந்தவை. பௌத்த–சிங்கள ஆதிக்கத்திற்கு எதிராக போராடும் எமது மக்களுக்கும் மொழி மற்றும் மாநில உரிமைக்காக போராடும் தமிழக மக்களுக்கும் சரி எதிர் திசையில் இந்த புலம்பெயர் சருகுப் போராளிகளின் பயணம் இருக்கிறது.

தாயக, புலம்பெயர் உறவுகள் இந்தவகை குறுக்குவழி சாகசங்களில் நம்பிக்கை கொள்ளாது ஒரு உறுதியான அரசியல் சமூகமாக, ஒருங்கிணைந்த சுதந்திரமான அமைப்புகளைக் கொண்ட மக்கள் சமூகமாக கட்டமைவதை நோக்கி நகருவோம்!




# காற்றுவழிக் கிராமத்தில் ஒரு கண்ணகியம்மன்

(15ம் பக்கத் தொடர்ச்சி) புலம்பெயர்ந்த தமிழர்கள் இருவர் தமது காணிகளை 12 காணியில்லாத குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். எனினும், பூதங்காக்கும் காணிகள் பலவற்றை அவ்வாறு கொடுப்பதற்கு மனமில்லாத ஒரு தொகுதியினர் பங்குத் தந்தையிடமும் ஆயர் இல்லத்திடமும் தமது காணி உறுதிகளை கொடுத்து வைத்திருப்பதாக ஒரு புலம்பெயர்ந்த தமிழர் குற்றஞ் சாட்டினார்.

ஒருபுறம் தமிழ்ச் சமூகத்தில் நிலமற்ற வீடற்ற மக்கள். இன்னொரு புறம் புதர் மண்டிக் கிடக்கும் பெரு மாளிகைகள். ஒருபுறம் தேவையோடு தவிக்கும் தாயக மக்கள். இன்னொரு புறம் தாயகத்தைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு காசை என்ன செய்வது என்று தெரியாமல் கொட்டிச் சிந்தும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம். நாட்டைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு நாட்டுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்று புலம்பெயர்ந்த தமிழர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அவர்களிடம் உள்ள அளவற்ற செல்வத்தையும் தாயகத்தில் காற்றுவழிக் கிராமங்களின் தேவைகளையும் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களின் மூலம் இணைப்பதற்கு யார் உண்டு?

குறிப்பாக, புங்குடுதீவில் குடிநீர் ஒரு பிரச்சினை. ஒரு சிறிய குடிநீர்ச் சுத்திகரிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 40 லட்சம் வரை தேவை என்று கணிப்பிடப்படுகிறது. கண்ணகியம்மனுக்காக செலவழிக்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டால் இது மிகச்சிறியது. கோவில் தூண் ஒன்றுக்காக காசு கொடுத்த எட்டுப் பேர் சேர்ந்தால் ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நிறுவலாம்.

புங்குடுதீவு மருத்துவமனையில் இப்பொழுது மூன்று மருத்துவர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் சிங்களவர். அவர் தான் பொறுப்பதிகாரி. அண்மை ஆண்டுகளில் அவ்வாறு சிங்கள மருத்துவர்கள் தீவுகளுக்கு நியமிக்கப்படும் ஒரு நிலைமை. சிங்கள மருத்துவர்கள் தான் அதற்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கணித விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அங்கே குறைவு. பிள்ளைகள் யாழ்ப்பாணம் நகரத்துக்குத் தான் வர வேண்டும். அல்லைப்பிட்டியில் கிறீஸ்தவ திருச்சபையினரால் கட்டப்பட்ட ஒரு சர்வதேசப் பாடசாலை உண்டு. அது மதம் மாற்றும் நோக்கத்தோடு கட்டப்பட்டது என்று சில இந்துக்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். அப்படியென்றால் கோவில்களைப் புனரமைக்கும் காசில் பள்ளிக்கூடங்களைக் கட்டலாம். அறப் பணிகளைச் செய்யலாம். நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவலாம். தீவுகளின் சனக் கவர்ச்சியைக் கூட்டலாம்.

புலம்பெயந்த தமிழர்களையும் தாயகத்தையும் ஒருங்கிணைப்பது அல்லது தேவைகளையும் வளங்களையும் ஒருங்கிணைப்பது என்பது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதி தான். தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது சனத்திரட்சியை, இனத் திரட்சியைப் பாதுகாப்பதும் பெருக்குவதுந் தான். ஊர்பற்று இருக்க வேண்டும். அது நல்லது. அதைவிட நல்லது, அந்த ஊர்ப்பற்றானது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருப்பது.

# அமெரிக்காவின் தலையீடு!

(7ம் பக்கத் தொடர்ச்சி) ஊக்குவித்தல் என்னும் அடிப்படையில்தான் அமெரிக்காவின் ஈடுபாடு அமைந்திருக்கின்றது. இந்த நிலையில், அமெரிக்கா தமிழர் பிரச்னையில் பார்வையாளராக இருக்கக்கூடாது என்றால் இந்தியா போன்று தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையில் அமெரிக்காவும் நேரடியாக தலையீடு செய்ய வேண்டும். தமிழர்களுக்காக பிரத்தியேகமாக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

ஆனால் உலகம் அதிகம் பிராந்தியமயப்பட்டுவரும் சூழலில் அவ்வாறான தலையீட்டுக்கான வாய்ப்பில்லை. சம்பந்தன் இந்த விடயங்களை அறிந்து பேசுகின்றாரா அல்லது விடயங்களை அறிய முடியாத கையறுநிலையில் பேசுகின்றாரா? பொதுவாக தமிழ் அரசியல் தரப்புகள் தங்களின் கற்பனைகளையே இராஜ தந்திரமாக முன்வைப்பதுண்டு.

அமெரிக்கா தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கும் கருத்துகளே இதற்கு சிறந்த உதாரணமாகும். அமெரிக்கா போன்ற உலக சக்திகள் நீண்ட கால அடிப்படையில் தான் விடயங்களைக் கையாளும். ஒரு நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் கூட்டத்தில் பலம் பொருந்திய சக்திகள் பந்தயம் கட்டாது. பெரும்பான்மையை கையாளவே முடியாதவோர் இக்கட்டான சூழலில் தான் ஏனைய மக்கள் கூட்டங்கள் மீது அவர்கள் பார்வை படும். அமெரிக்காவை பொறுத்தவரையில் அவ்வாறான சூழல் இதுவரையில் இலங்கைத் தீவில் ஏற்படவில்லை.

# எங்களைத் தொடர்ந்து ஏமாற்றாதீர்கள் -சம்பந்தர்

(3ம் பக்கத் தொடர்ச்சி) இருந்தீர்கள் எனினும் தற்போது நீங்கள் ஜனாதிபதியாக உள்ளீர்கள் எனினும் நமக்கான அதிகாரபகிர்வினை காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் அற்ற ஒரு தீர்வினை வழங்குவதற்கு நீங்கள் முயற்சிப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த போது இதற்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க நான் ரணில் விக்கிரமசிங்க ரணில் ராஜபக்ச அல்ல என நகைச்சுவையாகப் பதிலளித்தார்.

# வடக்கு கிழக்கில் புதிதாக 71

(9ம் பக்கத் தொடர்ச்சி) அபகரிக்கப்பட்டுள்ள 4374.8ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009க்குப் பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விவரண அறிக்கையும், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையில் நடைபெற் றது இன அழிப்புத் தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலை நாட்டப்பட வேண்டும் எனபதையும் வலியுறுத்தி கனேடிய பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச் சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையினால் நடாத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகர் நினைவு கூர்ந்திருந்தார்.

# தமிழ்க்கட்சிகளுக்கு அரசியல் நீரழிவு நோய்!

16ம் பக்கத் தொடர்ச்சி) இதற்குப் பதிலாக மாற்றுப் பயிர்ச்செய்கையைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. நாமும் மாற்றுப் பயிர்ச்செய்கையைப் பற்றி அக்கறைப்படும்படி தொடர்ந்து வலியுறுத்துகிறோம். விவசாயிகள் அதில் ஈடுபடுவதற்குத் தயங்குகிறார்கள். இதனால் உழுந்து, பயறு, கௌபி, கடலை, பருப்பு வகை, பருத்தி, மஞ்சள், மிளகு, பழங்கள் எனப் பலவற்றையும் இறக்குமதி செய்து கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதைக் குறித்து எங்களுடைய அரசியல் தலைவர்களுக்கும் அக்கறையில்லை.

ஏதாவது அபிவிருத்தித் திட்டங்கள் வந்தால் அதை உடனடியாக எதிர்க்க முயற்சிப்பார்கள். இப்படித்தான் வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவுக்கு வந்தபோதும் எதிர்த்தார்கள். ஒரே தரப்புக்குள்ளேயே முரண்பட்டு மாங்குளத்தில் கட்டவேண்டும் என்று ஒரு தரப்பும் ஓமந்தையில் கட்ட வேணும் என்று இன்னொரு தரப்பும் சண்டையிட்டன.

இந்த மாதிரியான விடயங்களில் கலந்தாய்வை மேற்கொள்ளக் கூடியவாறு துறைசார் நிபுணத்துவக் குழு எதுவும் நம்மிடமில்லை. அப்படி ஒரு குழு இருந்தாலும் அதற்கொரு அரசியற் சாயத்தைப் பூசி விடுவார்கள். இதனால் பாதிக்கப்படுவது மக்களே.

ஏனென்றால், முதலீட்டாளர்களுக்கு சிரமங்கள் அதிகம் இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. ஒரு முதலீட்டாளர் படுகின்ற சிரமத்தைப் பார்க்கின்ற ஏனைய முதலீட்டாளர்கள் இந்தப் பக்கமாகத் தலை வைத்தும் படுக்க மாட்டார்கள். இதை எம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நாடும் நம்முடைய மக்களும் இருக்கின்ற நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் பிழைப்புத் தேடி வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பிறப்பு வீதம் குறைந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் எல்லாம் குறைவடையப் போகிறது. சனத்தொகை குறைந்தால் நமக்கான நிதி ஒதுக்கீடுகளும் வள ஒதுக்கீடுகளும் குறைவடையும். அதைத் தடுப்பதற்கு நாம் பல வழிகளிலும் முயற்சிக்க வேண்டும் என்கின்றனர். இந்த நியாயத்தை நாம் மறுக்க முடியாது.

முதலில் இந்தத் திட்டத்தை அரசியல் பகைமை, அரசியல் லாபநட்டக் கணக்குகளுக்கு அப்பால் பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்தத் திட்டம் வடக்கில் கைவிடப்பட்டால், அதை தென்பகுதிக்குக் கொண்டு செல்வதற்கு அங்கே தயாராக உள்ளனர். விகாரைகள் கட்டப்படுவதை எதிர்க்கலாம். அதில் நியாயமுண்டு. இப்படியான தொழில்வாண்மைக்கான முயற்சிகளைத் தடுக்க முடியுமா? என்று அபிவிருத்திக் கண்ணோட்டமுடைய சிலர் கேட்கின்றனர். அவர்களுடைய நியாயம் என்னவென்றால், கரும்பு உற்பத்தியை பிரேசில், இந்தியா, இந்தோனேசியா, சீனா, கியூபா என உல கில் 120 நாடுகள் மேற்கொள்கின்றன. முன்னணி வகித்த பிரேசிலைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்தியா முதலிடத்துக்கு வந்துள்ளது. இந்தியாவில் மூவாயிரம் ஆண்டுக்கு முன்பே கரும்புச் செய்கையும் அதன் பயன்பாடும் இருந்துள்ளது. இப்பொழுது இந்தியாவில் 03 வீதமான நிலப்பரப்பில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. 4.5கோடி விவசாயிகள் கரும்புச்செய்கையில் ஈடுபடுகின்றனர். இதில் தமிழகம் 50 வீதமான உற்பத்தியைச் செய்கிறது. 2.5 லட்சம் ஏக்கரில் கரும்பு உற்பத்தி நடக்கிறது.

இந்தியா முழுவதும் 500க்கு மேற்பட்ட சர்க்கரை ஆலைகள் உள்ளன. இதில் 41 ஆலைகள் தமிழகத்தில் மட்டும் உண்டு. ஆலைகளை விட கரும்பு ஆராய்ச்சி மையங்கள், உற்பத்திப் பிரிவுகள் எனப் பலவும் செயற்படுகின்றன. கரும்பு தின்னக் கைக்கூலி எதற்கு என்று தமிழில் பழமொழி கூட உள்ளது. தமிழ்ப் பண்பாட்டில் கரும்புக்கு முக்கியமான இடமுண்டு. பொங்கல், பண்டிகைகளில் கரும்பு முன்னிலைப்படுத்தப்படுகிறது. அந்தளவுக்குத் தமிழோடும் தமிழர் வாழ்வோடும் கரும்பு பின்னிப் பிணைந்திருக்கிறது. அப்படியான கரும்பு கசக்கிறது என்கிறார்கள் இந்தப் புத்திஜீவிகள்.

உலகில் 80 வீதத்துக்கு மேலான சீனி மற்றும் சர்க்கரையை கரும்பிலிருந்தே உற்பத்தி செய்கிறார்கள். மீதியையே பீற்றூட்டிலிருந்து எடுக்கிறார்கள். கியூபாவின் பொருளாதாரத்தில் பாதியை கரும்பே நிறைவு செய்கிறது. உலகப் பெரும் புரட்சியாளர்கள் ஃபிடல் காஸ்ரோவும் சேகுவேராவும் கரும்பு வெட்டும் தொழிலைச் செய்திருக்கிறார்கள். அதையே தமது அடையாளமாகவும் கொண்டிருந்தனர். நம்முடைய அரசியல் தலைவர்களுக்கோ கரும்பு கசக்கிறது!

கரும்புச்செய்கையை மேற்கொள்வதாயின் அதற்கான நிலம், நீர் போன்றன உண்டா என்று வவுனியா மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது, ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசப்பட்டது. பின்னர் அமைச்சரவை, ஜனாதிபதி ஆகிய தரப்புகள் தொடர்பு கொண்டு பேச்சுகளை நடத்தின. இதன் போது தேவையான நீரைப் பெற்றுக் கொள்ள முடியும் என நீர்ப்பாசனத் திணைக்களமும் தேவை யான காணிகளை வழங்க முடியும் என வனப் பிரவினரும் காணி அமைச்சும் சொல்லியுள்ளன. ஆனால், திட்டத்தை இன்னும் இறுதி செய்யவில்லை என்று அறிகிறோம் என்று சொல்லப்பட்டது.

கரும்பு கசக்குமா? இனிக்குமா? என்று சரியாகத் தீர்மானிக்க முடியவில்லை. அதைத் தீர்மானிக்க வேண்டியது மக்களே. அப்படித்தான் இந்தத் திட்ட த்தை முன்மொழிந்த ரெலோவும் சொல்கிறது.


முல்லைத்தீவு புனிதபூமி
அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின்
வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 12வது ஆண்டு இன்னிசை
மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# பூகோள அரசியலும் ரணிலின் பயணமும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் போது, எரிசக்தி, மின்சக்தி மற்றும் துறைமுகத் திட்டங்கள் குறித்து, கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகன் குவாத்ரா, கொழும்பு வந்து இறங்குவதற்கு முன்னர், அலி சப்ரி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் தொடர்பான தகவல்களை மேற்கொள்வதற்காக, கொழும்பு வந்த வினய் மோகன் குவாத்ரா தனது பயணத்தின் முடிவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், இலங்கை,-இந்தியா இடையிலான உறவில் நேர் மறையான மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறியிருந்தார்.

பதவியேற்று ஒரு வருடத்துக்குப் பின்னர் இந்தியாவுக்குச் செல்லும் ரணில் விக்கிரமசிங்கவிடம் புது டெல்லி பல விடயங்களை எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தை பயனுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் மாற்றுவதற்கான பேச்சுக்களை முன்னெடுக்கவே இந்திய வெளிவிவகாரச் செயலாளர்

பொய்த்துப் போயிருப்பதைக் காட்டுகிறதா அல்லது, இந்தியாவின் நிபந்தனைகள் தொடர்பாக பரவிய கதைகள் உண்மைத்தன்மையற்றவையா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணம், பூகோள அரசியலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதில் சந்தேகம் இல்லை.



இலங்கையும் இந்தியாவும் அண்டை நாடுகள். நீண்டகால கலாசார, வாழ்வியல் தொடர்புகளைக் கொண்ட நாடுகள்.

4 பில்லியன் டொலர்களை கொடுத்து உதவிய நாடு இந்தியா.

இந்தியாவின் அந்த உதவிகள் கிடைக்காது போயிருந்தால், பட்டினி நோய்கள் போன்ற பல காரணிகளால் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் நேர்ந்திருக்கும். சமூக குழப்பங்களும் உருவாகியிருக்கும்.

சீனாவின் கடன் பொறியினால் தான் இலங்கை நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது என்ற குற்றச்சாட்டுகள் சீனாவுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியதும், இந்தியா, அமெரிக்காவின் அழுத்தங்களும், இலங்கையின் போக்கும் சீனா நெருக்கடியான தருணத்தில் வரையறுக்கப்பட்ட மனிதாபிமான உதவிகளையே பெரும்பாலும் வழங்கியது. அமெரிக்காவைப் பொறுத்த வரையில், நெருக்கடியில் இருந்து மீட்கும் சர்வதேசமுயற்சிகளை ஒருங்கிணைத்துக் கொடுத்ததுடன் மனிதாபிமான உதவி களையும் வழங்கியது. இலங்கைக்கு வெளிநாட்டு நாணய உழைப்பை அளிக்கும், சுற்றுலாத் துறையை தூக்கி விடுவதில் ரஷ்யா கணிசமான பங்களித்திருக்கிறது. இவ்வாறான நாடுகளுடன் உறவுகளை பேணுவதும் கையாளுவதும் மிக முக்கியமானது.

ஒன்றுடன் ஒன்று முரண்படாத வகையில், ஒன்றுடனான உறவு, இன்னொன்றுக்கு புண்படுத்தாத வகையில், நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நாற்பக்க வியூகத்துக்குள் இலங்கை சரியான இடத்தை தெரிவு செய்யத் தவறினால், எல்லாமே பிழைத்து விடும்.

அதற்கான கவசமாகவே அணி சேரா கொள்கையை இலங்கை பயன்படுத்திக் கொள்கிறது. ஆனால், இது எல்லா நேரங்களிலும் பொருத்தமானதோ, எல்லா நாடுகளையும் சமாளிக்க கூடியதாகவோ இருக்கும் என்றில்லை.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



குறிப்பாக, இந்தியா-சீனா விடயத்தில், ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்ற நிலை தான் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்குப் பிந்திய இலங்கை, எரிசக்தி, மின்சக்தி துறைகளில் முதலீடுகளை எதிர் பார்க்கிறது. அதற்கு தேவையும் அதிகம் இருப்பதால், இந்த துறைகளில் முதலீட்டை ஈர்க்க முனைகிறது.

அது போலவே துறைமுகத் திட்டங்களையும் விரைவுபடுத்துவதன் மூலம், கடல் போக்குவரத்து வாய்ப்புகளை இலகுபடுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவுக்கு திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி திட்டத்தை கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிகிறது.

(22ம் பக்கம் பார்க்க)

கொழும்பு வந்திருந்தார். இது இரண்டு தரப்புகளுக்குமிடையிலான பேச்சு நிகழ்ச்சிநிரலை இறுதி செய்து முக்கியமான உடன்பாடுகளை எட்டுவதற்கான ஒரு நடவடிக்கையாகத் தெரிகிறது.

1987இல், இந்திய-இலங்கை உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்கு முன்னர், இந்திய வெளிவிவகார செயலாளர் மேனன் பல முறை கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொழும்புப் பயணத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

அதேபோன்று தான் தற்போது, இந்திய வெளிவிவகாரச் செயலாளர் கொழும்பு வந்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க எத்தகைய தயார்படுத்தல்களுடன் வர வேண்டும் என்பதை திட்டவட்டமாக தெரிவிப்பது தான் அவரது இலக்கு எனக் கருதப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை புதுடெல்லிக்கு அழைப்பதற்கு இந்தியா பல்வேறு நிபந்தனைகளை விதித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பல வாரங்களாகவே பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது.

அதாவது, இந்தியாவின் திட்டங்களுக்கு காணப்படுகின்ற இடையூறுகளை களைதல், சீனாவின் ஆதிக்கத்துக்கு முட்டுக்கட்டை போடுதல், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு போன்ற விடயங்களில் இந்தியா வாக்குறுதிகளை எதிர்பார்க்கிறது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு கொழும்புக்கு நிபந்தனைகளை விதிப்பதாகவும், அழுத்தங்களைக் கொடுப்பதாகவும் கூறப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்களை அறிவிக்க வேண்டும், என்பதும் அவ்வாறான நிபந்தனைகளில் ஒன்றாக சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான எந்த அறிவிப்பையும் வெளியிடாமல், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த ஏற்பாட்டையும் முன்னெடுக்காமலேயே ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லியில் சென்று இறங்கப் போகிறார். இது ரணில் விக்கிரமசிங்க விடயத்தில் இந்தியாவின் எதிர்பார்ப்பு

இவ்வாறான இரண்டு நாடுகளுக்கிடையில் தலைவர்கள் பயணம் மேற்கொள் வதில் என்ன பூகோள அரசியல் இருக்கப் போகிறது எனக் கேள்வி எழுப்புவோரும் உளர்.

இலங்கையின் ஒவ்வொரு அரசியல், இராஜதந்திர, இராணுவ நகர்வுகளி லும் பூகோள அரசியல் இருக்கிறது. பூகோள அரசியலின் தாக்கம் எதிரொலிக்கிறது.

இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் தான், இந்தப் பூகோள அரசியல் சூதாட்டத்தின் மையமாக விளங்குகிறது. இந்த அமைவிட முக்கியத்துவம் இல்லையென்றால், இந்தியாவோ, சீனாவோ, அமெரிக்காவோ எட்டியும் பார்க்காது.

இந்தியாவுக்குத் தெற்காக, மிக அண்மையில் அமைந்திருக்கின்ற இந்த தீவை தங்களின் கைக்குள் போட்டுக் கொள்வதன் மூலம், இந்தியாவின் மீது பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி பாதுகாப்பு ரீதியாகவும் அழுத்தங்களைக் கொடுக்கலாம் எனச் சிந்திக்கிறது சீனா.

இந்தியாவை பொருளாதார மற்றும் பாதுகாப்பு ரீதியாக சுற்றி வளைத்தல் என்ற சீனாவின் வியூகத்துக்குள் இலங்கையை ஒரு பாத்திரமாக மாற்றும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வியூகத்துக்குள் இலங்கை எந்த இடத்தில் இருக்கப் போகிறது என்பதை தீர்மானிப்பதில் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் கணிசமான தாக்கம் செலுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.


பொருளாதார நெருக்கடிக்குப் பிந்திய இலங்கையில், அதாவது ரணிலின் தலைமைத்துவம் உறுதி செய்யப்பட்ட இலங்கையில், இந்தியா-சீனா என்ற இரண்டு போட்டி நாடுகளையும், அமெரிக்கா-ரஷ்யா என்ற இரண்டு வல்லரசுகளையும், எவ்வாறு கையாளுவது என்ற தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டம் இதுவாகும்.

இலங்கை நெருக்கடியில் சிக்கிய போது எந்த நாட்டுக்கும் வழங்காதளவுக்கும், எந்த நாடும் வழங்காதளவுக்கும்


Friends MATRIMONY
உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட வரன்கள் கைவிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.
கனடாவில் வசிக்கின்ற வயது 29 முதல் 36 வயது வரை வேளாளர், Mixed வேளாளர், கோவியர், குருகுலம் சார்ந்த, Diploma, Bachelor Degree, Master Degree வரை படித்த மணமகளுக்கு (Single/Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 115173, 120203, 120208)
லண்டனில் வசிக்கின்ற, தற்சமயம் 3 மாதம் கனடாவில் இருக்கும் 61வயது வெள்ளாளர் சாதியை சார்ந்த, Diploma வரை படித்த மணமகனுக்கு (Divorced) கனடா, இந்தியா, லண்டனில் வசிக்கும், வயது 40 முதல் 57 வரை இருக்கும் பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 112677)
கனடாவில் வசிக்கின்ற 25 வயது வேளாளர் சாதியை சார்ந்த, Master Degree வரை படித்த மணமகளுக்கு (Single) வயது 26 முதல் 30 வரை கனடா, அமெரிக்காவில் வசிக்கும் பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம் (FMID 120109)
கனடாவில் வசிக்கின்ற 25 வயது முதல் 50 வயது வரையான (Catholic/Christian) Master Degrees வரை படித்த மணமகனுக்கு (Single/Divorced) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.
வெற்றிகரமான திருமணம்
(FMID 119779, FMID 119713)

+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 2259
+1 416 477 6854
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri 11AM to 6PM
Sat 12PM to 6PM
www.friendsmatrimony.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். வெளியூ ர் பயணங்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சலுக்கு பிறகு கடினமான காரியம் கூட கைகூடும்.




ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பலரும் உங்களை தேடி வருவார்கள். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் முன்னேற்றம் ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம். தொழில் வியாபாரம் வேகமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.




கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். அதனால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள்.





சிம்மராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். மற்றவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். புதிய வீடு வாகனம் சேர்க்கை உண்டாகும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும்.




கன்னிராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். சொத்துக்களை விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். குடும்பத்தினரிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம் ராசி அன்பர்களே! மனதிடம் அதிகரிக்கும். பணவரத்து இருந்த போதிலும், எதிர் பாராத செலவும் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது. குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வீண் பேச்சுகளை தவிர்ப்பதும் நன்மை தரும்.





விருச்சிகராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி தரும். சுப செலவுகள் அதிகமாகும். திடீர் கோபம் ஏற்பட்டு நீங்கும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பத்தினரது செய்கைகள் கோபத்தை தூண்டும் படியாக இருக்கலாம். கவனம் தேவை.








தனுசுராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிக்கு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூர தகவல்கள் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும் குடும்பத்தில் உங்கள் சொல்வன்மை அதிகரிக்கும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைப்பட்டிருந்த வாகனம் வாங்கும் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! தைரியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மிளிரும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. நிறைவான லாபம் வரும். தொழில் வியாபரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் சொல்படி நடப்பது நல்லது. மேலதிகாரிகள், அனுசரனையாக நடந்து கொள்வர்.




மீனராசி அன்பர்களே! எடுக்கும் காரியங்கள் வெற்றியை தரும். மற்றவர்களது உதவி கிடைக்கும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப் பூர்வமான அறிவுத் திறன் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். பேச்சாற்றலால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். பதவி உயர்வு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# நோக்கப்படாத கோணங்கள்

(18ம் பக்கத் தொடர்ச்சி) குழந்தையை வாங்கிக் கொண்டு மேலே போனாள். போகும் போது மாமா கோயில்லே இருந்து பிரசாதம் கொண்டு வந்தனான். மேசையிலே இருக்கு எடுங்கோ என்றாள்.

போன் திரும்பவும் ஒலித்தது.

மாமா நான் எடுக்கிறேன் என்றாள் சியானி. அது நேத்தனின் நம்பர் தான்.

ஓவிசியருக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. கீழே அவரும் எடுத்து விட்டார்.

சியானி நான் கேட்டது கோவமா?

இல்லே.

அப்ப ஏன் ஒன்றும் சொல்லாமல் போட்டீர்?

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிற இடம் அது இல்லை. அது கோவில்!

அப்படியென்றால் சியானி இப்ப சொல்லும்.

நான் என்னுடைய மனுசனுக்கு நல்லதொரு மனைவியாகவும் என் குழந்தைக்கு நல்ல அம்மாவாகவும் தான் இருக்க ஆசைப்படுகிறன். யாருக்கும் வைப்பாட்டியாக இருக்க நினைக்கல்லே. அது எனக்கு விருப்பமும் இல்லை. அவ்வளவு தான் என்னுடைய பதில்.

சியானி நீர் என்னோட கதைச்ச கதைகள் பழகிய விதம் எல்லாம் என்னுடைய மனதில் அப்படி ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்திப் போட்டுது. அது தப்பு என்று இப்ப நினைக்கிறேன்.

நேத்தன் ஊரிலே பார்த்திருப்பீர். ரையில் தண்டவாளத்திலே ஓடுது. பக்கத்திலே கைகாட்டி மரம் நிக்குது. கைகாட்டி கை காட்டுறதோட நிக்க வேணும். ரையிலே பயணம் செய்ய ஆசைப்படக் கூடாது. ஆசைப்பட்டால் இரண்டுக்கும் நல்லதில்லை. அந்தப் பிரண்ஷப்புக்கும் அர்த்தம் இல்லை. நான் சொல்லுறது உமக்கு விளங்கும் என்று நினைக்கிறேன். நீர் எனக்கு எப்பவும் நல்லதுக்கு வழி காட்டுற கை காட்டியாக இருக்கப் பாரும்!

என்னை மன்னித்துக் கொள்ளும் சியானி.

ஏய்! நேத்தன் என்ன படங்களிலே சிரியல்லே வாற மாதிரிக் கதைக்கிறீர்? நான் மனதிலே ஒன்றும் நினைக்கல்லே. இங்கே பாரும். இன்றைக்கு என்னுடைய கல்யாண நாள். நல்ல மரக்கறி எல்லாம் சமைச்சு வைச்சிருக்கிறேன். மனதிலே இருந்து இந்தக் குப்பைகளை எல்லாம் கூட்டி ஒதுக்கிப் போட்டு நல்ல மனத்தோடை சாப்பிட வாரும் என்ன?

உம்மைப் பற்றி என் மனத்திலே நல்லதொரு அபிப்பிராயம் இருக்குது. இன்னுமொரு முறை தடம் புரண்டு அதைக் கெடுத்துப் போடாதையும். சரியோ. இப்ப போனை வையும்! தானும் போனை வைத்து விட்டாள் சியானி.

ஓவிசியர் மனதில் ஆயிரம் சிந்தனைகள். எங்கள் கலாச்சாரத்திலே எத்தனை அடிதடிகளுக்கும் கொலைகளுக்கும் குடும்பப் பிரிவுகளுக்கும் தலை குனிவுக்கும் காரணமான அதே பிரச்சினை ஒன்று எவ்வளவு இலகுவாக இங்கே ஒரு சிறு பெண்ணால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விடுகின்றது. இந்தத் தீர்வுக்கு திருக்குறள் காரணமா? இல்லைத் திருவாசகம் காரணமா? எதுவும் இல்லையே.

புகுந்த நாட்டிலே கைப்பற்றிக் கொண்ட கலாச்சாரத்தின் விளப்பத்தினால் தானே வாழ்க்கையிலே இப்படியான பிரச்சினைகளை சந்திக்க வேண்டியும் இருக்கும் இது சகஜம் என்று நினைத்துக் கண்ணைக் கசக்காமல் கணவனிடம் சொல்லாமல் சியானி தானே பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டாள். அப்படி இல்லாமல் அவள் கண்ணகி வேடம் போட்டு எல்லோருக்கும் சொல்லி நீதி கேட்டிருந்தால் தொடர் பகை தானே மிஞ்சியிருக்கும். வாழ்க்கையும் எவ்வளவு அலங்கோலப் பட்டிருக்கும்.

உடையிலும் உருவத்திலும் மாற்றம் ஏற்படும் போது கலாச்சாரம் அழிகிறது என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் எம்மவர்கள் இன்றைய இளசுகளின் உள்ளத்தில் ஏற்படுகின்ற இந்த வலுவான அக மாற்றங்களைக் கண்டும் ஏன் மௌனமாக இருந்து விடுகிறார்கள். எமது கலாச்சாரத்தில் காணப்படும் தீயனவற்றை உதறி விட்டு அன்னியப் பண்பாட்டில் உள்ள நல்லவற்றை மட்டும் உணர்ந்து ஏற்றுக் கொண்டு இயங்கும் சியானி போன்றவர்கள் செல்லும் திசை எவ்வளவு மேன்மையானது? எம்மவர்கள் ஏன் இந்தக் கோணத்தில் பார்க்க மறுக்கிறார்கள்?

மாமா பிரசாதம் எடுத்தியளோ என்றாள் சியானி.

மகளே நீதான் எனக்கு இறைவன் தந்த மிகப் பெரிய பிரசாதம் என்றார் ஓவிசியர்.

# பூகோள அரசியலும் ரணிலின் பயணமும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) திருகோணமலை துறைமுகம் மீது இந்தியாவுக்கு நீண்ட காலமாகவே ஒரு கண் இருக்கிறது. அதன் அருகில் சீனக்குடா எண்ணெய் குதங்களும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் திருகோணமலை துறைமுகத்தை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்து, பிராந்தியத்தின் எண்ணெய் கேந்திரமாக்குவது அரசாங்கத்தின் திட்டமாகத் தெரிகிறது.

இது இந்தியப் பிரதமர் மோடி 2015இல் முதல் முறையாக இலங்கைக்கு வந்த போது இணங்கிக் கொள்ளப்பட்ட விடயம். ஆனால், 8 ஆண்டுகளாகியும் நடைமுறைக்கு வரவில்லை. திருகோணமலை விடயத்தில் இந்தியாவுக்கு அக்கறையுள்ள நிலையில், அதனை வைத்து சீனாவின் முதலீடுகளின் மீதான இந்திய அழுத்தங்களை குறைக்க ரணில் அரசாங்கம் திட்டமிடுகிறது.

ரணில் விக்கிரமசிங்க வரும் ஒக்ரோபர் மாதம் சீனாவுக்குச் செல்லவிருக்கிறார். அங்கு மேற்கொள்ளப் போகும் முதல் பயணத்தில், பெருமளவில் முதலீடுகளைக் கொண்டு வரும் நோக்கம் அரசாங்கத்துக்கு உள்ளது. சீனாவின் சினோபெக் உள்ளிட்ட இரண்டு நிறுவனங்கள், அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் பெரியளவில் முதலீட்டை மேற்கொள்ள திட்டங்களை முன்மொழிந்திருக்கின்றன. அது போல பல மூலோபாயத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு சீனா விரும்புகிறது.

ரணில் விக்கிரமசிங்க சீனப் பயணத்தின் போது, இறுதி முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.அதனால் அவர் புதுடெல்லிப் பயணத்தின் போது, இந்தியாவைச் சமாளிக்கும் திட் டங்களுக்கு முன்னுரிமை அளிக்க விரும்புகிறார். குறிப்பாக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையின் மூலம், இந்தியாவைச் சமாளிக்க அவர் முற்படுகிறார். ஆனால், இந்தியா, இலங்கையில் தனது நலன்களை அடைவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகிறதா– சீனா, நலன்களை அடைய விடாமல் தடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப் போகிறதா என்பதைப் பொறுத்தே, ரணில் விக்கிரமசிங்கவின் இந்த இலக்கு வெற்றிகரமானதாக அமையுமா என்பது தீர்மானிக்கப்படும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
ஐயப்பன் இந்து ஆலயம் திறந்தவெளி அரங்கில்
2023 AUG 5&6
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
EVENT SPONSOR
$10,000 பெறுமதியான அதிஷ்டலாபப்பரிசுகள்
KIDS RIDE
POWERED BY
REALTOR AnAnth THARMALINGAM
416.939.9525
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
JOYTHI
Blazing Minds 2023
SILVER SPONSORS
அனுமதி இலவசம் FREE ADMISSION
நந்தா உணவகம் NANTHA RESTAURANT
New Premium Stone Ltd
416.858.1290
K.Theepon
Play back Singer Ananthu
Singer Rajaganapathy
Play Back Singer Latha Krishna
Zee Tamil Title Winner Varsha
Mega Tuners
Shuruaaz
AUGUST 5th, 6th - ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.